REGISTERED NO. M. 1434 தனிப்பிரதி அணா 2

நாடார்குலமித்திரன்

THE NADAR KULA MITRAN.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று
வெளிவரும்,

மாதம் மும்முறைப் பதிப்பு.

"தண்ணுடைய ரேன்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" (திருக்குறள்)

சுதந்தரம்! சமத்துவம்!! சகோதரத்வம்!!!

பத்திராதிபர், சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

நாடார்குல மித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 3-8-0.
சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

நாடார்குல மித்திரன் விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.
நெல்லரை விளம்பரம் அவ்வளவு 1-க்கு ரூ 0-4-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

மலர் 4.] துந்துபி வரு மார்கழி மீ 7உ வியாழக்கிழமை (அருப்புக்கோட்டை) 1922 வரு டிசம்பர் மீ 21உ [இதழ் 12

சௌந்தரகாந்தி.

இது ஒரு
புதிய நாவல்! இனிய நாவல்
மதியைவிளக்கி மகிழ்ச்சியைத் தரும் நாவல்!!!

[இஃது திருநெல்வேலிப்பட்டணம், பா. பி. இரத்தினபாண்டிய ரவர்களால் எழுதப்பெற்றது.]

பாண்டிய பரம்பரையைப்பற்றியும், பாண்டிய மன்னர்களின் ஆட்சி முறையைப்பற்றியும் தெளிவாய் நாவல்ரூபமாய், சொற்சுவைபொருட்சுவை யோடுமுதல்முதல் வெளிவந்த தமிழ் நாவல் இதுவே. சற்றேரும், மற்றேரும் கவிந்து கொண்டாடப்பெற்றது. ஆண், பெண் இருபாலருக்கும் அருமை யான பெருமையைத்தரும் பேர்பெற்றது. படிக்க புத்தியையும், பார்க்க வித்தையையும் தரும் சக்திபெற்றது. ஆசிரியர் படத்தோடும் கூடியது.

இதன் விலை அணா 12, தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

நாடார்குலமித்திரன் ஆபீஸ்,
அருப்புக்கோட்டை.

ஜீவரக்ஷணம்

ஜுவரங்கள், இருமல், கபம், காஸபீ, கயம், ஆஸ்மா, குன்மம், அதீசாரம், வயிற்றுளைவு, மந்தம், சாவரா, பிளேக், பேதத்திலுண்டாகும் பலவிதமான நோய்கள், தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, ஜலதோஷம், மார்சளி, பல் வியாதிகள், காதுவலி. இன்னும் இதற்கு வியாதிகளையும் அதிசீக்கிரத்தில் குணப்படுத்தும்.

புட்டி ஒன்றுக்கு விலை ரூ 2—0—0.

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

குறிப்பு:-ஏழைகள் நோவை, வியாதிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

விலாசம்:-
ஜீவரத்னம் கம்பெனி,
நெ 6. சேலம், (தென் இந்தியா)

நேசானுகூலன்.

இஃதொரு நெற்க தமிழ்ப்பத்திரிகை வாரம் இருமுறை பிரசுரிக்கின்றது. தேசிய ராஜீயவிஷயங்களுடன் வெளிவருவது. இதன் அருமை பெருமை அனுபவம் முதலியவற்றை வாசகர்கள் படித்தறிந்து கொள்ள வேண்டி மன்றி எழுத வியலாது.

ஆசிரியர்
வேளு, K. அருணாசல தேவர்.

சந்தா விபரம்.

உள்ளூர்	வெளியூர்க்கு வருஷம் 1-	ரூ 10—00
அல்லது	ரூபாய்	15—0—0
6-மீ க்கு	திங்கி	ரூ 5—50
அல்லது	ரூபாய்	8—0—0

மானேஜர்,
நேசானுகூலன்
பிளஸ்டீட்
பிளஸ்டு.

அநேக பத்திரிகைகளாலும் கற்றோர்களாலும் நன்கு மதிக்கப்பட்டது எது?

ஆநந்தமகிளா.

அநேக சித்திரப் படங்களுடன் கூடியது.
மூன்றும் பதிப்பு.

இச் சிறந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டிய பல நூல்களில் ஒன்று. இதில் ஸ்திரீ புருஷர்களின் அவயவ அமைப்புகள், பொருத்தங்கள், உலக இன்பத்தையடையும் பல நல்வழிகள், தேகாரோக்கிய விதிகள், சந்தான சந்தோஷ தேஹதுக்களும் அவற்றையடையும் விதங்களும், பூர்வீக சந்தோஷ சல்லாப அனுஷ்டான முறைகளும் வெகு தெளிவாய் எடுத்துரைப்பது. விலை 1—8—0.

விலாசம். ஜி. எஸ். ஏஜென்ஸி, புதுவை.

இனும்! இனும்!!

செல்வரனுக்கிந்தனை இனும்!

5-வது காங்பரன்ஸ் ரிபோர்ட் இனும்!

நாடார்குல மித்திரன் மாதம் மும்முறைப் பதிப்பு.

நமது மித்திரனுக்கு புதிய இரண்டு சந்தாதாரர்களைச் சேர்த்துக்கொடுத்த முன்பணமாக அனுப்பச் செய்கிறோர்களுக்கு, மாநாடு தண்டுப்பத்து ஸ்ரீமான் செ. செல்லத்துரை என்ற ஆறுமுகப் பெருமாள் நாடாரவர்கள் இயற்றிய செல்வரசுக்கீர்த்தனை இனுமாக அனுப்பப்படும். இதில் பலவர்ணமெட்டுகளாலான கீர்த்தனைகளும், மற்றபாட்டுகளும் அடங்கியிருக்கிறது. அனுகூலிலாபிப்புள்ளது. பழைய சந்தாதாரர்கள் தங்கள் 4-வது வருடத்துக்குச் சந்தாத் தொகையாகிய 3-8-0யையடிசம்பர் மீ 30உ க்குள் அனுப்பினால் நாடார்குலத்தவர்களின் முக்கிய வரசன்தலங்களில் ஒன்றாகிய விருதுபட்டியில் கூடிய 5-வது காங்பரன்ஸ் ரிபோர்ட்டு இனுமாக அனுப்பப்படும். இது உயர்ந்த டிம்மியில் பதிப்பிக்கப்பட்டது. விலை 6 அணா மதிப்புள்ளது. இதில் 5-வது காங்பரன்ஸுக்கு விஜயஞ்செய்த ஒவ்வொருவருடைய பெயர்முதலிய முழு கட்டுரைக்கைகளின் வியாமும், செலவு கணக்கும், மற்றவர்களுடைய அரிய உபந்நியாசங்களும் அடங்கியிருக்கிறது.

நாடார்குல மித்திரன் ஆபீஸ், அருப்புக்கோட்டை.

நவாசம் பொருந்தியது.

ஐயா! தாத்துக்குடி யென்ற சிறுபட்டிணத்தில் கரையில் காப்பாய, காப்பிளைப் முதலியவைகள் தக்கவாறு திரிக்க இல்லையென பலரால் சொல்லப்பட்டு வந்ததால் விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த வங்கள் 'சுதேசி சுலபோஜன சாலையை' இங்கர் மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ஸ-ஸ-ஸ்ரீ தனம் F. S. பெரியார அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் தனவான்களும் உணவு அருந்தியேன் னை சௌகரியப்பிரகாரம் கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரோப்ரைட்டர்கள்
விருதுபட்டி.

எஸ். எஸ். சுருப்பையா நாடார்.
எஸ். ராமசாமி நாடார்

அமரர் புராணம்.

ஒப்புயர் ஒவ்வாமலையாய் சர்க்காரில் உயர்ந்த உத்தியோகம் வகித்துக் காலஞ் சென்ற மேதாவி G. S. கொர்நேலியூஸ் நாடார் அவர்கள் இயற்றிய அரிய நூல். சான்றோர் ஒப்பப் பெருமையை வெகு தெளிவாக எடுத்து விளக்கிக் காட்டுவது. இதன் அருமை பெருமைகளைப் பாராட்டாதவர் எவரும் இல்லை. 500 பக்கம் கொண்ட பெரிய புஸ்தகம் லெ பிரதியே வகுதிருப்பு. விலை ரூ 2—8—0 தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்.—
ஸ்ரீமதி பூரணம் கொர்நேலியூஸ் அம்மாள்,
நாசரேத்து P. O. திருநெல்வேலி ஜில்லா.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

தியாகராஜன் அல்லது திறமையுள்ள ஓர் வாலிபன்

(முன் தொடர்பு.)

ஐந்தாம் பாகம்.

நம் கார்த்திகேயனும் தியாகராஜனும் கண்ட மாளிகையைப் பற்றி சற்று கவனிப்போம். மாளிகைக்குச் சற்று தூரத்தில் கல்லாலச் செய்த குதிரைகள் பல நிற்கின்றன. இன்னும் அவிட்டத்தில்வில், வாள், நட்டி முதலிய பல கல் ஆயுதங்கள் கீழே கிடக்கின்றன. துடர்ந்து நறைத்து ஒலி நிகின்ற மாங்கனியினுடையே ஆங்காங் பல கூவிக்கொண்டிருக்கின்றன. அக்கம் பக்கங்களில் மனுஷசப்த மென்பதே கிடையாது.

இவைகளை விட்டு விட்டு உள்ளே பார்ப்போமானால் முதல் ஹாலில் கல்லாலச் செய்த மனுஷ உருவங்கள் பல வரிசையாக நிற்கின்றன. இவைகளின் தொகை எண்ணுற்றைந்து. இச்சிப் பெரிய ஹாலின் மறுபக்கத்தில் இரண்டு கதவுகள் இருக்கின்றன. இவ்விரண்டு கதவுகளும் இரண்டு பாதைகளுக்கு அறைகளாக இருக்கின்றன. மேற்கூறிய அறைகள் ஒன்றில் பறவைக்கூடுகள் பல தொங்கவிடப் பட்டிருக்கின்றன. அவைகளில் பல்வகையான பறவைகள் அடைக்கப் பட்டிருக்கின்றன: அவைகளிக் கீழே நடமாடிக் கொண்டிருக்கின்றன. அவைகளின் மத்தியில் பருந்து, மயில், தருத்மேனியும், நீண்ட மூக்கும், உருண்ட கண்களும், படர்ந்த தோளும் உடைய ஓர்மானிடன் நின்று கொண்டிருக்கிறான். இவன் அடிக்கடி பறவைகளைக் கையில் பிடித்துக் கொண்டதன் காதின் பக்கத்தில் வைத்து சற்று உற்றுக் கேட்கிறான். அவைகளுடன் பேசுவது போலவும் தெரிகிறது. இவன்தான் தயந்ரயன் என்னுமோர் மந்திரவாதி. இவன் ஓர்யாகம் செய்வதற்காக நூறு ராஜகுமாரர்களின் ஆயினைக்கவரும் ஓர் கெட்ட எண்ணத்துடன் இருக்கிறான். இக்கோரிக்கையை நிறைவேற்றுவதற்காகவே இந்தப் பறவைகளையும் இன்னும் சில மிருகங்களையும் வைத்திருக்கிறான். இவைகளின் உதவியாலும் தன்னுடைய மந்திர சக்தியாலும் இந்நாவரையாக் தொண்ணூற்றைந்து ராஜகுமாரர்களின் ஆயினையும் கவர்ந்து விட்டதோடு அவர்களின்உடம்பையும் அவர்களுக்குச் சொந்தமான சகல வஸ்துக்களையும் கல்லாக மாற்றி விட்டான். இவர்களுள் நான்காந்தியோனும் ஒன்று. இன்னும் ஐந்து ராஜகுமாரர்களின் ஆயினை தேடிக் கொண்டிருக்கிறான். அதுபற்றிய சக்தியின் அரியும் பொருட்டு சில பறவைகளையும் விடுவித்திருக்கிறான்.

இனி இரண்டாவது வழியாகச் சென்றால் ஒரு இருட்டு அறைக்குக் கொண்டுபோய் விடுகிறது. அந்த அறையின் கடைசியில் ஓர் நீண்ட கல்இருக்கிறது. அந்தக் கல்லின் மேல் மிதித்தால் சற்று தூரத்தில் ஓர் கதவு திறக்கிறது. அந்தக் கதவின் வழியாகச் சென்றால் படிகள் இருக்கின்றன. இந்தப் படிகளின் வழியாகச் சென்றால் ஓர் பிரகாசமான அறையில் கொண்டுபோய் விடுகிறது: இந்த அறைக்கு எங்கிருந்து வெளிச்சம் வருகிறதென்பது தெரிய வில்லை. ஆனால் இயற்கையாகவே பிரகாசமா யிருக்கிறது: ஓர்மத்தியில் ஹோம குண்டம் ஒன்று இருக்கிறது. அதிலிருந்து சிறிது புகை கிளம்பிக் கொண்டே யிருக்கிறது. இப்பீடத்தின்மேல் தொண்ணூற்றைந்து கும்பங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இதுதான் தனஞ்சயனின் யாகசாலை.

இவன் தன்னுடைய மந்திர சக்தியால் கார்த்திகேயனை தர்மபுரியிலிருந்து காட்டிற்கு இட்டுக் கொண்டு வந்து முன் கூறிய அதிசயங்களைக் காண்பித்து மன்னன் புதல்வனின் மனதைக் கவர்ந்து அவனை தன் ஆரண்மனைக்கும் கொண்டுவந்துவிட்டான். இவனுக்கு நியாகர. இவனுடைய உயிர் வேண்டாததாகையால்கார்த்திகேயன் உள்ளேவந்ததும் கதவை அடைத்துக்கொள்ளும்படி செய்துவிட்டான். தன்னுடைய மந்திர பலத்தினால் கார்த்திகேயனையும் கல்லாக மாற்றி வீட்டு அவனுடைய ஆவியையும் ஓர் கும்பத்தில் அடைத்துக்கொண்டு போய் யாகசாலையில் வைத்து விட்டான்.

இவ்வாறு தனஞ்சயன் தன் கெட்ட எண்ணங்களை நிறைவேற்றப் பிரயாசை எடுத்துக் கொண்டிருக்கிறான்.

(இன்னும் வரும்)

கல்லூரிமாணவன்.

ஸ்ரீ கிருஷ்ணலீலை.

(மீரமாமுனி எழுதியிருர்.)

மலரவன் சிறுர்க்கன்றுகளைக் கவர்ந்தது.

முன்தொடர்ச்சி.

மற்றொருநாளில் ஸ்ரீபகவான்இடைப் பிள்ளைகளை யெல்லாம் கூட்டிக் கொண்டு கன்றுகளை யெல்லாம் ஒருபக்கத்தில் மேய விட்டு ஒரு மணற் குன்று மீதிருந்து போஜனம் அருந்திக் கொண்டிருக்கையில் ஸ்ரீ கிருஷ்ணன் தமது திருக்கையிலிருக்கிற புல்லாங்குழலை இடையில் சொருகி இடது கட்டத்தில் வன்றொழும் வைத்திருக்கிற மாட்டுக் கொம்பும் இடது கையில்தத்தியோதனத்தையும் வைத்துக்கொண்டு கோபாலர்கள்கூடிவிருந்து பரிகாசவார்த்தையால் அவர்களை சந்தோஷப்படுத்தி சாதாரணபிள்ளைகளைப்போல் தாமும் போஜனம்பண்ணினார். அது சமயத்தில் எதிரில் மேய்ந்துகொண்டிருந்த கன்றுகள் மறைந்து விட்டன. கோபாலர்கள் அந்தக் கன்றுகளைக் காணோமென்று ஆந்தி போஜனம் பண்ணாதேஎன்றால் வீராப்படுகிற சிறுவர்களை நோக்கி, கிருஷ்ணன் நீங்கள் ஒன்றுக்கும் விசனப்பட வேண்டாம் உங்கள் கன்றுகளை நான் கட்டிக் கொண்டு வருகிறேன். நீங்கள் பயமில்லாமல் போஜனம் செய்யுங்கள் என்று சமாதானம் பண்ணி கண்ணன் கையிலிருந்த தயிரோதனத்தின் பாதியை போஜனம் பண்ணி மற்றப் பாதியைக் கையிலே வைத்துக் கொண்டு அந்தவனமெல்லாம் கன்றுகளைத் தேடிக் காணாமல் திரும்பவும் போஜனம் செய்ய விடத்திற்கு வந்தார். அவ்விடத்தில் பிள்ளைகளும் ஒருவருமில்லாமல் மறைந்தனர். ஞானிகளும் அறியக்கூடாத தூயவன் தனது பிரியமாதாமைரன் சிவப்பக்கன்றினங்களைத் தேடிக் காணாமல் திரும்பியபோது முல்லையாய்ச்சியரது பிள்ளைகளையும் மனற்குன்றின்மேல் காணாத காரணம் யாதென நினைந்தார்.

தாமரையில் வீற்றிருக்கும் பிரகாசம் பொருந்திய ஸ்ரீ சரண்டியின்காயகனை நான்முகன் இவர்கள் பாவரையும் ஒழிந்தான் என்பதுணர்ந்து தம்முடைய யோசவல்லமையினாலே ஸ்ரீ கண்ணபிரானை அயர் நிலவர்களாம் பசுக்களும் இளங்கன்றுகளாக உருக்கொண்டனன். மற்றுமந்நியலாத சிறப்பினையுடைய மழலைச் சொற்களைப் பேசும் வாயுடைய ஆயர் பத்திரர்களது எண்ணமும் அழகும் தோற்றமும் வடிவும் செய்தொழிலும் குணமும் ஒழிபொருந்திய அழகிய ஆபரணங்களும் உடைகளும் ஊதுகின்ற இனிய புல்லாங்குழலும் நீண்ட கொம்புகளும் ஒழிதும் மாறாதலில்லாமல் ஒவ்வொருவருக்கும் உரியனபோல் அமைந்திருந்தது. அவ்வமைப்போடே ஒருவருடம் வரையும் ஓடந்துகொண்டிருந்தது.

பின்பு ஒரு நாள் பலபத்திரன் சகல இடையர்களுடன் கோவர்த்தன பர்வதத்தில் பசுக்கள் யாவையும் ஓட்டி மேய்த்துக் கொண்டிருக்கையில் எல்லாப் பசுக்களும் ஏருங்களுடன் எக்காளம் போட்டு வாலை உயரத்தூக்கிக் கொண்டு ஒரே பாய்ச்சலாக இடைச் சேரியினருகில் மேய்ந்து கொண்டிருக்கிற கன்றுகளினருகில் வருகையில் கோபாலர்கள் யாவரும் கூடியவரை யிலேமிவந்து பார்த்தும் பசுக்களைநிறுத்தமாட்டாமற் போனார்கள். அந்தப் பசுக்கள் கன்றுகளைமுகந்து பார்த்து நக்கிக் கொடுத்து மடிகொள்ளாமல் சுரந்து மேலே விழுகிற பாலை ஊட்டக் கொடுத்துக் கொண்டிருந்தன. அப்போது கோபாலர்கள் மிகவும் இளம்பையடைந்து கொஞ்சம் வெட்கத்துடன் இடைச்சேரிக்குச் சமீபத்தில் கன்று மேய்த்துக் கொண்டிருந்த பிள்ளைகளிடத்தில் வந்து அவர்கள் சமீபத்தில் கன்று மேய்த்துக் கொண்டிருந்தமையால் பசுக்கள் ஓடிவந்திதென்று கோபித்துக்கொண்டு அருகில்வர அவர் கோபந்தணிந்து சந்தோஷத்துடனேபிள்ளைகளைக் கட்டிக்கொண்டு மடியில்வைத்துஉடம்பின் தூசியைத் துடைத்து முத்தமிட்டு உச்சிமோந்து ஆனந்தமடைவதைபலபத்திரன் பார்த்து ஆச்சரியப்பட்டு கன்றுகளிடத்தில் பசுக்களும், பிள்ளைகளிடத்தில் கோபாலர்களும் பாராட்டும் விசுவாசமும்இயற்கைக்கு மீறி கண்ணபிரானிடத்தில் எனக்கு நிகேதம் விருத்தியடைவதுபோல் விருத்தியாகிறபடியால் இவர்களெல்லாரும் பகவதம்சமாயிருக்கவேண்டுமென்று நிச்சயம்பண்ணி யோகத்தினால் அத்தனையேபேரையும் ஸ்ரீ கிருஷ்ணனுகவே யிருக்கக்கண்டு பலராமர் கிருஷ்ண மூர்த்தியினிடஞ் சென்று தேவரீருடைய பிரபாவத்தை ஜனகாதிகளும் அறியமாட்டார்கள். தேவரீரது மாயையால் அடியேனு மிவ்வளவு காலம்மோகத்தையடைந்திருந்தேன். இப்போது தம்முடைய கிருபையால் மாய்கை தெளிந்து உம்மகிமையைக் கண்டேன் என்று தோத்திரஞ் செய்கிறபல பத்திரனைப் பார்த்து தான் சர்வசொரூபியா யிருப்பதையும் அறிதலுடைய காரணத்தையும் அவருக்குச் சொல்லி மற்றக் கோபாலர்களுடன் சகோதரப் பட்டுக் கொண்டிருக்கையில் பிரமா பார்த்து நம் இளித்து வைத்தகன்றுகளும் இடைப்பிள்ளைகளும் வெளியில் வந்து விடடார்களோ வென்று ஆச்சரியப்பட்டு ஓடிப்போய் மலைக்கு கையல்ப் பார்க்க அவைகள் அங்கிருக்கக்கண்டு அதிக ஆச்சரியங் கொண்டு அச்சிறுபிள்ளைகளையும், கன்றுகளையும், பகவத் சொரூபமாகவே தெரிந்து ஆனந்த பரவசராய் மெய்மறந்து தெளிந்து அன்னம் வீட்டிலங்கி கிருஷ்ணனிட நிருவடிகளில் வணங்கி அஞ்சலி அஸ்தராய் தோத்திரம் செய்கின்றார்,

நீலமேக சாமளவர்ண நின்மலரே பீதாம்பரமுடுத்து நவரத்னகதி ஆபரணங்களணிந்து சுகந்தபரிமள புஷ்பமணிந்து திருத்துழாய் மாலை தரித்து கஸ்தூரி திலகமும் முன்னெற்றிச் சுட்டியும் கொண்டு புல்லாங்குழல் முதலியவற்றை இடையில் சொருகி திருவடித் தாமரைகளிஸ்தவுங்கைகளைச் பிக்கஸ்ரேஸ்லீலாமானுஷவிக்ரஹராய் இளங்கன்றுகளைகாணுமல் த்தேடுகின்ற சாமான்ய சிறுவனைப்போல் பிருந்தாவனமார்க்கங்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கிற உம்மை நமஸ்கரிக்கிறேன். ஜகன்னாதராயும் பரமாத்மா வாயுமிருக்கிற தேவரீரிடத்தில் எனது தபோபலத்தினால் பெற்றுக் கொண்ட இந்த அண்டாதிபத்திய கர்வத்தினால் என்னை மறந்து உமது மகிமையை அறியாமல் வியர்த்தமாய் எனது சாமர்த்தியத்தை என்னையுடைய தேவரீரிடத்திலே பிரயோகித்து அபராதஞ்செய்தேன். அதைத் திருவுளத்திற் கொள்ளாமல் தேவகனிடத்தில் பிரபுவைப்போலும், சிஷ்யனிடத்தில் குருவைப்போலும், பிள்ளையிடத்தில் பிதாவைப்போலும் க்ஷமித்து ரட்சிக்க வேண்டும் என்று பல வாறு நிர்த்து,மது சத்தியலோகம்போய்ச்சேர்ந்தார் பின்னர் கோபாலர்களும் பசுக்கூட்டமும் இடையில் நேர்ந்த மாயா காரியங்களைச் சிறிதும் உணராதவர்களாய் பகவானுடன் பழயபடி அன்பு பாராட்ட பகவானும் புன்னகைகொண்டு அவர்களுடன் பொழுது சாய்ந்ததும் பிருந்தாவனம் சென்று மகிழ்ந்தனர்.

(இன்னும் வரும்)

தமிழருக்கு

(காலஞ்சென்ற ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியார் எழுதியது.)

தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே! உனக்கு நல்லகாலம் வந்துவிட்டது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள்; தெய்வங் கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றியிருக்கின்றார்கள். அச்சில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை கண்ணுக்குத் துடைத்துவிட்டால்நீ பக்கங்களிலும் பார். ஒருநிலைக்கண்ணாடியிலே போய்ப்பார்.

உனது நாட்டு ஸ்திரீகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை வீரம், கலிதை. அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு சாஸ்திரங்களை யெல்லாம் தமிழில் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. "ஜாதிரண்டொழிய வேறில்லை" என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமை யென்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை "வாழ்க்கைத் துணை" என்றனர். ஆக்மாவும் சக்தியும் ஒன்று, ஆணும் பெண்ணும் சமம்.

வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்துகொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டு பயனடைந்துகொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி, விலங்குகள் போல நடந்துகொள்ளாதே.

தமிழா உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க்கதைகள் மிஞ்சிவிட்டன. உனது மதக் கொள்கைகள், வைதிக நடை, லௌகீக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து நிலைதடுமாறி ஆட இடங்கொடுத்துவிட்டாய் இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும் வெளியிலும், தனிமையிலும், கூட்டத்திலும், எதிலும் எப்போதும் வேறுமை இருக்க வேண்டும். உண்மை யுரைத்தல் வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது; பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேதங்களைக் காட்டிலும். உண்மைப் பேதந்தான் பெருமை கொண்டது உண்மை தவறுகளுக்கெல்லாம் உயிர் உண்மை சான்றிரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆகவால் தமிழா, எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை "முக்கிய சாஸ்திரந்தான் மெய்; பிற்கிய சாஸ்திரம் பொய்" என்று நீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? தகப்பன் வெட்டிய கிணறென்று சொல்லி மூடர்கள் ஊற்று நீரை குடிக்கிறார்கள், என்று பஞ்சதந்திரம் கூறுகின்றது.

இவ்வுலகத்தில் நான்கு புருஷார்த்தங்கள் என்று நமது பெரியோர்கள் கூறியதை அருள் புரிந்திருக்கிறார்கள்.

அவை:-அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும், உனது சுற்றத்தார்க்கும், பிறர்க்கும் செலுத்தவேண்டிய கடமை. அது "பிற?" என்பதனுள் வையக முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் தற்பயன் கருமித்து அறங்களாகும்.

பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும், கலையும், புகழும் நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல், இவைப் பெருமை சேர்த்தல் இவை யெல்லாம் செல்வம். இச் செல்வத்தைச் சேர்த்தல் மனிதஉயிர்க்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து, முதலிய ரஸ வஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்களெல்லாம் தமிழா, உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகு மேமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பமெய்துக.

வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. 'வீடு' என்ற சொல்லுக்கு "விடுதலை" என்பது பொருள். மேற்கூறப்பட்ட. மூன்று புருஷார்த்தங்களிலும் ஈடேறிய பெரியோருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலை அருள் செய்வான். தமிழா, உனக்கும் புருஷார்த்தங்கள் கைகூடுக.

(லோ) ஈ.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

நாடார்களும் கோயிலும்.

(ஆரணியிலிருந்து வெளிவரும் "கோதயத்தில்" தேசாபிமானி என, கைச்சாத்திட்டு ஒருவர் பின்வருமாறு எழுதுகிறார்.)

நாடார் குல முன்னேற்றத்திற்காக உழைத்து வரும் "நாடார்குல மித்திரன்" நாடார்கள் கோயிலுக்குட் பிரவேசிக்கிறதைப் பற்றி கார்த்திகை மீ 16உ வெள்ளிக்கிழமை வெளிவந்த பத்திரிகையில் கடிதமொன்றைப் பிரயோகித்து ஒரு தலையங்கம் எழுதியிருந்தீர்கள். இதற்குமுன் இதைப்பற்றி இதர பத்திரிகைகளிலும் பல வியாசங்கள் வந்திருப்பதையும் படித்திருக்கிறேன். திருப்பூரில் நடந்த மாசாண மகா நாட்டில் இவ் விஷயத்தைக் குறித்து பலத்த விவாதம் நடந்தது. கடைநிறுப்பூர் மகா நாட்டிற்கு நானும் போயிருந்தேன். எனக்குத் தெரிந்த வரையில் அங்கு நடந்த நிகழ்ச்சிகளையும் மனதில் வைத்துக்கொண்டு இவ் விஷயத்தை யாராய்ச்சி செய்கிறேன்.

அறையில்.

நாடார்கள் கோயிலுக்குட் பிரவேசிக்க அனுமதி கொடுக்க வேண்டும் என்கிறதைப் பற்றிக் கீழ்க்கண்ட தீர்மானம் விஷய ஆலோசனைக்கு வந்தது.

"தமிழ் நாட்டிலுள்ள சமூகத்தினர் பாண்டிய நாட்டிலுள்ள தேவாலயங்களில் பிரவேசிக்க வொட்டாமல் ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அமைதியான முறையில் சாத்திரங்களில் கட்டுப்பாடு இருக்குமானால் அவைகளை மாற்றவும் சர்க்கார் நிட்டங்களை ஆதரிப்போர் உடனே முயன்று வேண்டுவன செய்யுமாறு இம் மகாநாடு தீர்மானிக்கிறது"

விஷயாலோசனைக் கமிட்டியில் இத்தீர்மானத்தை ஸ்ரீமான் வி. ராமசாமி நாயக்கரவர்கள் பிரேரணைசெய்தார். அதன் சாதகமாக மூன்று முக்கிய காரணங்களைச் சொன்னார்:— (1) நாடார்களுக்கும் ஹிந்து மதத்தைச் சேர்ந்த இதர ஜாதியாருக்கும் இந்த விஷயத்தில் ஒற்றுமை ஏற்பட்டால் காலகாலம் வேளாமதபுரம், மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் வெகு முமரமாய் நடக்கும். (2) இந்த ஒற்றுமை ஏற்படாவிடில் நாடார்கள் காங்கரஸைவிட்டு விலகி விடுவார்கள் அல்லது அந்த மூன்று ஜில்லாக்களை தமிழ்நாடு காங்கரஸ் இலாகாவிலிருந்து பிரித்து விடுத்தான் இனி காங்கரஸ் வேலையை நடத்த வேண்டும். (3) பாண்டிய நாட்டில் இந்து சகோதரர்களின் மனதை அலைத்து வருகிற கடிதங்கள், 'சாத்திரம்' 'சாத்திரம்' என்ற கூக்குரலை விட்டொழித்து, நாடார்களின் விஸ்வாசத்தையும் ஒத்துழைப்பையும் பெற்றவேண்டும். ஸ்ரீமான் நாயக்கரின் காரணங்களின் குண குணங்களைக் கவனிப்பதற்கு முன், ஒரு முக்கியமான அம்சத்தைக் கவனிக்கவேண்டும். விஷயாலோசனைக் கமிட்டியில் இதைப்பற்றி பிரஸ்தாபம் வரும் பொழுது. சிலர் மேலே குறித்த தீர்மானம் சரியாய் வரையப் பட்டிருக்கவில்லை என்றும் அம்மாதிரியே அதை நிறைவேற்ற வேண்டுமென்று சண்பர்கள் விரும்பினால் அதை காங்கரஸின் அதிகாரத்திற்கு அதிமாகுமென்றும் ஆகையால் அது ஒழுங்கானமாகு மென்றும் ஆலோசனை சொன்னார்கள். ஆனால் அதை அங்காசனரானது இதர பிரமுகர்களாவது கவனிக்கவில்லை வாதம் நடைபெற ஆரம்பித்தது. அப்பொழுது ஸ்ரீமான் வைத்தியநாதய்யர் தீர்மானத்தின் அவயவத்தை யொப்புக்கொள்வதாகவும் ஆனால் சாத்திரத்தை மாற்றவேண்டுமென்று சொல்லலோ அல்லது மாற்றவோகாங்கரஸுக்கு அதிகாரமில்லை என்றும், உண்மையில் நாடார்கள் தேவாலயங்களுட் போகக்கூடாது என்று வந்த சாஸ்த்திரமும் நிலுக்கொல்ல வில்லை என்றும் எடுத்துக்காட்டிய பிறகு பலத்த வாதத்திற்கிடமுறாமல் "சாத்திரத்திலிருந்தால் அவைகளை மாற்றிக்கொள்ளவும்" என்பதை எடுத்து விட்டால் நலமாயிருக்கும் என்றும் வேண்டிக் கொண்டார். அதற்கு ஸ்ரீமான் நாயக்கரவர்களும் விஷயாலோசனைக் கமிட்டியாரும் சம்மதித்தனர். வெகு ஆத்தாத்துடனும் கோபத்துடனும்இந்தத் தீர்மானம் பிரேரணை செய்யப்பட்டு, தீர்மான வாக்கியத்தின் போக்கு நன்கு கவனிக்கப்படாமல், விஷயாலோசனைக் கமிட்டியில் அவசரமாய் நிறைவேறிற்று.

அம்பலநந்தில்.

மகநாட்டில் ஷை தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியால் நீக்கி விடப்பட்ட சொற்றொடருடன் அதாவது "சாத்திரத்திலிருந்தால் அவைகளை மாற்றவும்" என்பதுடன் ஆகியில் வரையப்பட்டபடியே ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரவர்களால் பிரேரணை செய்யப்பட்டது. இதை ஸ்ரீமான் வைத்தியநாதய்யர் ஆதேபித்தார். கொஞ்சநேரம் வாக்குவாதம் நடந்தபின் அதே தீர்மானத்தை ஸ்ரீமான் முதலியார் ஆதரித்துப்பேசினார். ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் அதை ஆமோதித்தார். பலத்த ஆதேபசமாதானங்கள் நடந்தன. எல்லாம் ஒரே அமைதியாயிற்று. கடைசியில் ஆதித்தீர்மானத்தின் வலுவைக் குறைக்கும் ஒரு திருத்தப் பிரேரணையுடன் அது நிறைவேறிற்று.

தவறின்மேல் தவறு.

பிரஸ்தாப தீர்மானத்தில் 'அமைதியான முறையில்' என்பதின் அர்த்தமென்ன? இந்தத் தீர்மானம் மகா நாட்டில் நிறைவேறிவிட்டால் உடனே நாடார்கள் பாண்டியநாட்டு ஆலயங்களுக்குள் பிரவேசித்து விடலாமா? இல்லாவிட்டால் பிரவேசிப்பதற்குமுன் "அமைதியான முறையில்" என்னென்ன பூர்வாங்க வேலைகள் செய்துமுடிக்க வேண்டும்? காய்ச்சலும் உயர்வு தாழ்வு என்கிற பேதபுத்தியுமாறி, தீர்மானத்தை ஆதரிக்கக்கூடிய மனோநிலைமை பாண்டிய நாட்டில் ஏற்படவேண்டாமா? கோயில் தர்மகர்த்தாக்களுடன் இவ் விஷயம் ஆலோசனைக்கு வந்து, சுதந்தமியில் போனால் நாடார்களுக்கும் இதர ஜாதியாருக்கும் மனத்தாபங்க ளில்லாமலும் அமைதியுடனும் தீர்மானத்தில் அடங்கியிருக்கும் லக்ஷியம் நிறைவேறும்? இம்மாதிரியான அம்சங்கள் விஷயா லோசனைக் கமிட்டியில் கவனிக்கப்படாதது முதல் தவறு. இரண்டாவது தக்கயோசனை சொல்வதை விட்டு பக்தவமாய் இதோபதேசம், புத்திமதி சொல்வதை விட்டு, தீர்மானத்தை ஆதரித்த ஸ்ரீமான்கள் முதலியாரும் நாயக்கரும் கோபங்கொண்டு சாத்திரங்களைப் பழிந்ததும் பிறகு, சாத்திரம் சரியானதா சரியில்லையா? அதற்கு மறிப்பு உண்டா இல்லையா? இந்தியா முழுவதும் ஒரு சாத்திரம் அனுஷ்டிக்கப்படுகிறதா இல்லையா? இராமாயண மகாபாரதங்களை கம்பலமா அண்வது அவைகள் பிராமணரால் சுயநன்மைக்காக ஏற்படுத்தப்பட்டனவா என்கிற பிரச்னைகளில் தலையிடநியாயமும் அவசியமுமில்லை. மேலும் இந்த ஆராய்ச்சிக்கும் பிரஸ்தாப தீர்மானத்திற்கு யாதொரு சம்பந்தமுமில்லை. நாடார்கள் சமத்துவமும் சகோதரத்துவமும் அடையவேண்டுமென்பதை யாவரும் ஒப்புக் கொள்வார்கள். ஆனால் அதை எப்படி யடையும்படிச் செய்வது என்பதில் யாருக்கும் தெளிவான யோசனை சொல்லத் தெரியவில்லை. சாத்திரத்தை மாற்றுவதென்றால் யார் மாற்றுகிறது? சர்க்காரஸ்? சங்கராச்சாரியார்களா? சட்டசபையா? சாத்திரத்தை மாற்றி விட்டால் உடனே நாடார்கள் கோயிலுக்குள் பிரவேசிக்கும்படி பிராமணர்களும் பிராமணரல்லாதாரும் அனுமதி கொடுத்து விடுவார்களா? நாடார்களும் கோயிலுக்கும் ஸமிலா சாத்திரம் ஒன்று தான் நிற்கிறதா? கட்டுப்பாடுகள் நிற்கின்றனவா? அல்லது பேதபுத்தி கொண்டமனதா? என்பதை யாரும் விளக்கவில்லை. மேலும் பாண்டிய நாட்டு விவகாரத்தை பாண்டிய நாட்டு காங்கரஸ் கமிட்டியுடனாகும் பிரதிநிதிகளுக்கும் விட்டுவிடாமல் இதர ஜில்லாக்களிலிருந்து வந்த பிரதிநிதிகளின்ஒட்டுக்கு விவகாரவாறு பொருந்தும்? அவர்கள் பாண்டியநாட்டின் சமூக வழக்கைச் சிக்கல் சீர்ப் பற்றி என்ன யோசனை சொல்லக் கூடும்? பொது விவகாரங்களில் சகல ஜாதியார்களும் யாதொரு தடையும் நிர்ப்பந்தமு மில்லாமல் கலந்து கொள்வதற்கான வழிகளாதேயென்று காங்கரஸின் வேலையா? அல்லது ராஜீய விவகாரங்களுக்குச் சம்பந்தப்படாத, பழக்க ஒழுக்கங்களில் தற்போது தலையிடுவது காங்கரஸ் நிட்டத்தை யாதரிப்போரின் கடமையா? நாடார்களைக் கோயிலுக்குட் போகாமல் தடை செய்யும் கட்டுப்பாடுகள் காங்கரஸ் வேலைக்கும் சகோதரபாவத்திற்கும் ராஜீய சமத்வத்திற்கும் எங்ஙனம் தடை செய்கிறது? நாம் தற்போது கோருவது ராஜீய (அதாவது வெளிநாட்டு விவகாரங்களில்) சமத்வமா? அல்லது ஆசார நியம நிஷ்டைகளில் சமத்வமா? பின்னர் கூறியதானால் அது ஹிந்துக்களுக்கு மாத்திரமா அல்லது தமிழ் நாட்டிலிருக்கும் ஹிந்து, கிறிஸ்தவ முகம்மதியர்களுக்குமா? இம்மாதிரியான சிக்கல்களைக் கவனிக்காமல், தலைவர்கள் ஒரே மிடிவாதமாய் இருதரப்பிலும் நின்றது பெரிதும் விசனிக்கத்தக்கது.

ராஜீயமும் மதமும்.

காங்கரஸ் சமத்வம் கோருகிறது. இதற்கு முதற்படியில் நிற்பது சுதந்தரம் நாம் சுதந்தரமும் சமத்வமும் கோருகிறோம். ஆனால் சமத்வத்திற்கும் சுதந்தரத்திற்கும் வரம்புகள் உண்டு. அரசியல் விவகாரங்களில் ஜாதிபேதம் மதபேதம் நிறபேதம் ஸ்தானபேதம் எனையபேதங்கள் உடனே அழியவேண்டும். நாடார்களுக்கும் உயர்குலத்தவரென்றழைக்கப்படும் பிராம்மண பிராம்மணரல்லாதாரென்போருக்கும் இதர மதஸ்தர்களுக்கும் யாதொரு உயர்வு தாழ்வுங்கூடாது. மதவிஷயங்களிலும் பல ஜாதிகள் ஒன்றுபட்டு உண்ணல் உறவாடல் தொடுதல் முதலியவைகளில் தாராளமியமின்றி ஒத்துப்போனால் யாதொரு கஷ்டமுமில்லை. அவ்விதம் ஒத்துப்போக இருகக்ஷியைச் சேர்ந்த தலைவர்கள் இடைவிடாது பிரயத்தனம் செய்யவேண்டியது அவர்கள் கடமையாகும். ஆனால் அம்மாதிரி ஒத்துப்போகக் கூடிய பரிபக்குவநிலைமையை நமது தேசம் அடையவில்லை மதவிஷயங்களில் அவரவர்கள் ஜாதிக்கட்டுப்பாட்டை ஒழிக்க முடியாதென்றால், அதற்கு மாறாக யார்தான் எந்த சட்டத்தை விதிக்கக் கூடும்? இங்கிலாந்தில் அனைவரும் ஒரு மதஸ்தராயினும் ரோமன்கதாலிக்ஸ் என்போர் ஒரு கோயிலிலும்புராடஸ்டண்டு என்போர் மற்றொரு கோயிலிலும் கடவுளைத் தொழுகிறார்கள். பிரத்யேகமான கோயிலில் தொழுவதால், அரசாங்கத்திலும் நீதிபரிபாலனத்திலும், சமத்வத்திற்கு யாதொரு பங்கமும் நேரிடவில்லை. ஒரு ஜாதியில் அநேக பாகுபாடுகள் அடங்கி நிற்கின்றன. ஆசாரம் வித்தியாசப் படுகின்றது. அவைகளை எல்லாம் மாற்றவதென்றால் ஆகிற வேலையா? மதவிஷயங்களுக்கும் அரசியல் விவகாரங்களுக்கும் சில வித்தியாசங்களிருக்கின்றன. ராஜீய சமத்வம் மதசார சமத்வமாகாது. இரண்டும் ஒன்றாக வேண்டுமென்று சொல்வது ஓர் பெரிய லக்ஷியம். அதை புத்த ரும் ஸ்ரீராமானுஜரும் சைவசமயாசாரியர்களும் ராஜாராம் மோகனராயும், கோகலேயும் ஆசார சீர்திருத்தக் கோஷ்டியைச் சேர்ந்தோரும் போதித்திருக்கிறார்கள். ஆனால் மகாத்மா காந்தியும் நிலகரும் வர்ணாஸ்ரமத்தை யொப்புக் கொண்டிருக்கிறார்கள். மத விஷயங்களில் சமத்வம் என்பது ஆத்மானுபவம் பெற்ற பெரியோர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதேயாயினும், அதுவல்லா மதஸ்தர்களாலும் தற்போது ஒப்புக் கொள்ளக் கூடாதது. ஆலயச் சமத்வமும் ராஜீயச் சமத்வமும் ஒன்றாகும்படிச்செய்ய காங்கரஸ் தலையிட வேண்டிய அவசியமில்லை. வேற்றுமையையுடைய பலரும் ஒத்துப்போனால், காங்கரஸ் அதை தடைசெய்யாது ஆதரிக்கும்.

தீண்டாமையும் காங்கரஸும்

தீண்டாமையை ஒழிக்கக் காங்கரஸ் கடமைப் பட்டிருக்கிறது. அரசியல் விவகாரங்களில் சமத்வமும் சகோதரத்வமும் ஏற்படவேண்டும். இப்படி காங்கரஸ் உத்தேசிப்பதால் ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குட் பிரவேசிக்க ஹிந்துக்கள் ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்றாவது அல்லது பந்திபோஜனம், விவாக சம்பந்தங்கள் பல ஜாதியார்களுக்குள் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்றாவது காங்கரஸ் சொல்லவில்லை. காங்கரஸின் அதிகாரம்பொறுவிலுகாரங்களில் அமுலுக்கு வரலாமேயன்றி, ஆலயவழிபாடுகள் போன்றவைகளில் யாரையும் கட்டுப்படுத்தாது. இந்த வித்தியாசத்தை யாவரும் கவனிக்கவேண்டும். சமூக வாழ்க்கைச் சீர்திருத்தங்கள் பிரத்யேகமாக ஏற்படவேண்டும்.

நாடார்களுக்கு ஒரு யோசனை சொல்கிறேன். சுதந்தரம் சுயமதிப்பினால் ஏற்படுகிறது. அவர்களைக் கோயிலுக்குட் வரக்கூடாது என்று பிராம்மணர்களும் வேறையோரும் தடை செய்தால், நாடார்கள் ஷை கோயிலைப் பகிஷ்கரித்து, பிரத்தியேகமானகோயில்களைக்கட்டிக்கொள்ளவேண்டும். ஆனால் தாயாதிகள் காய்ச்சலினால் தகப்பன் சொர்த்தத்தை விட்டு விடக்கூடாது என்பது போல் காங்கரஸிடத்தில் அவர்கள் வெறுப்பு கொள்ளக் கூடாது.

பொதுச்சமாச்சாரம்.

துப்பறியும் திலிப்பிள்ளை.

ஒரு கிளிப் பிள்ளையைக் கண்டுபிடித்து எடுத்துச் சென்ற மனிதனொருவன் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டான். அம்மனிதன் தனது பெயரைச் சொல்ல மறுத்துவிட்டான். ஆகையால் அவனை சில நாட்கள் வரை காவலில் வைக்க நேர்ந்தது. அப்போது அக்கிளிப்பிள்ளை தன் தலையை ஒரு வாறு சாய்த்துக் கொண்டு அம்மனிதனை "ஹலோ வியனார்ட்" என்று பெயரிட்டழைத்தது. அதைக் கேட்ட மாஜிஸ்டிரேட்டும் போலீசாரும் பெருங்கை புரித்தனர். ஏனெனில் வியனார்ட்என்னும் பெருங்கள்ளனைத்தான் போலீசார் பிடிக்க தேடித் திரிந்து கொண்டிருந்தனர். அம்மனிதன் பின்னர் தன்னுடைய பெயர் வியனார்ட் என்று ஒப்புக் கொண்டான். அக்கிளிப்பிள்ளை போலீசாரால் துப்பறியும் வேலைக்கு வைத்துக்கொள்ளப்பட்டது.

* *

கறுப்பு நிறமுடையோரை வெள்ளையராக்கலாம்.

பிரேசில் நாட்டிலுள்ள ஒரு நிபுணர் கறுப்புநிறமுள்ள நீகிரோ ஜாதியாரை வெள்ளையாக்கும் முறையை கண்டுபிடித்திருக்கிறார். இதுவரைக்கும் நிறங்களில் வித்தியாசத்தை எலிகளால் உண்டு பண்ணினார்கள். இப்போது இக்நிபுணர் வேறொரு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார். ஒரு காலிலும் ஒரு கையிலிலுமுள்ள இரத்தத்தை வெளியேறி இழுத்தெடுத்து அதைச் சூடாக்கி மற்றொரு காலிலும் கையிலும் விட்டால், ஒரு மாதத்திற்குள்ளாக தோலின் கறுப்பு நிறம் மாறி வெள்ளைநிறமாகிவிடும். கறுப்பர் வருப்பவர்களெல்லாம் இனி வெள்ளையர்களாகி விடுவார்களென்று சொல்லவும் வேண்டுமோ!

* *

2160 மைல்கள் கஸ்நடையாய் சென்ற பெண்.

26-வயதுடைய மிஸ் காதரீன் மக்கிரிகர் என்னும் பெண் தென் அமெரிக்காவில் லிமா, பெரு, பாரா, பிரேசில் முதலிய நாடுகளின் வழியாக 2160 மைல்கள் நடைப்பிரயாணம் செய்து நியூயார்க் பட்டணத்தைச் சேர்ந்தாள். இரண்டு கழுதை ஓட்டுபவர்களும் ஒரு பிரிட்டிஷ் வழிகாட்டியும் அவளுடன் சென்றிருந்தார்கள். மலைகள் மீதும் காடுகள் மத்தியிலும் நிற்கில, இடங்களில் முதலைகள் அபாயத்தினும், துஷ்ட மிருகங்கள் மிரட்டலினும் படாதபாடுபட்டு அவள் தனது பிரயாணத்தை பயமில்லாமல் செய்தாள். அதுவரைக்கும் வெள்ளை முகத்தைப் பார்த்திராத அநேக சுதேச நிராகரீகமற்ற மிலேச்சர்கள் வசிக்குமிடங்களின் வழியாக அவள் பிரயாணம் பண்ண வேண்டியதிருந்தது. ஆண்மக்களுக்கு ஆடியோடு ஆற்றைப் போகின்ற தைரியம் இக்காலத்தில் பெண்களுக்குப் பெருகிப் போவதின் மர்மம் என்னே!

* *

திகிலுண்டாக்கி விட்டது.

நவம்பர் மாதம் 28-க்கு தேதி ஜெர்மனி தேசத்து மாஜிமந்திரிகளுக்கு கொலைத் தீர்ப்பு செய்யப்படுமென்று எதிர்பார்த்திருந்த ஜனங்கள் திடுக்கிடைந்தனர். லண்டனில் அச்செய்கை பயத்தை உண்டாக்கி விட்டது. கிரேக்க புதிய அரசாங்கம் அந்நிய நாட்டினர் எந்த விஷயத்திலும் தலையிடுதல் கூடாதென்று கூறுகிறது. (பா. கி. வ.)

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

நாடார்குல மித்திரன்
ஞாயிறு மார்கழிமீ 7உ

சட்டசபையும் நாடார்களும்.

சென்னை மாகாணம் புதுச் சீர்திருத்தச் சட்ட சபையின் பிரதிநிதிகளாகவந்திருப்போர் 1923ஆம் வரையும் அவர்கள் ஸ்தானங்களை அடையவர்களாக விளங்குவார்கள். அவ்வருஷம் இறுதியில் நடக்கும் எலெக்ஷனில் யார் யார் வெற்றியடையவர்களோ அவர்களே 1924ஆம் சட்டசபையின் அங்கத்தினராவார்கள். இப்போது நாடார்களின் பிரதிநிதியாக ஸ்ரீமான் சொக்கநாதபாண்டிய நாடாரவர்கள் ஒருவரே விளங்கிவருகிறார்கள். அவர் ஒருவரேயானாலும் சட்டசபையைக் கைப்பற்றிய ஜஸ்டிஸ் கட்சியார்களுடைய ஒத்துழைப்பினாலே அவர் வாக்கு வன்மையும், மனோசக்தியும் மிகவே கொண்ட ஒரு சிறந்த மேதாவியாக விளங்கி வந்திருக்கிறார் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. அவர் சட்டசபையில் ஸ்தானம் வகித்து அங்கே நாடார்களுக்குச் செய்யவேண்டிய வேலைகளைச் செய்துவருவதுடன் நில்லாமல் தக்கணத்தில் பற்பல விடங்கள் தோறுஞ் சென்று நாடார்களில் சாதாரண ஜனங்களுடனும் தாராளமாய்ப் பேசி சிறந்த குலாபிமானியென்றும் பொது ஜனாபிமானியென்றும், சகலரும் புகழ அவர் தம்முடைய உள்ளன்பைக் காட்டி வந்திருக்கிறார். அவருடைய உத்தம குணத்தை மெச்சிப் பேசாத நாடார் ஒருவருமே யிரார். மனச்சாட்சிக்கு விரோதமாய் நடக்கமாட்டாரென்ற உண்மையை, ஏற்ற சமயங்களிலெல்லாம் காட்டிவந்திருக்கிறார். கேட்பதற்கின்பமான தொனியும், பார்ப்பதற்கு கெம்பீரமான தோற்றமும், எச்சமயமும் அச்சமில்லாமல்பேசும் சக்தியும் உடையவரென்பதை நாம் பல முறை பார்த்திருக்கின்றோம்.

இத்தகைய குணமுள்ள உத்தமரான ஸ்ரீமான் சொக்கநாதபாண்டிய நாடாரவர்களே மறுமுறையும் நாடார்களின் பிரதிநிதியாக ஏற்படவேண்டுமென்பதையே நாம் பெரிதும் விரும்புகின்றோம். அப்படியே நாடார்களனைவரும் விரும்புவார்களென்றே நம்புகின்றோம்.

ஆனால் இப்போது சட்டசபையை கைப்பற்றிக் கொண்டிருக்கும் கூட்டத்தார்களே மறுபடியும் வெற்றி பெறுவார்களென்றும், ஸ்ரீமான் பாண்டியரையே மறுமுறையும் நாடார்களின் பிரதிநிதியாக கவர்னர் பெருமான்தெரிந்தெடுப்பாரென்றும், இப்போது நாம் நிச்சயமாய் சொல்வதற்கில்லை யானதால், ஸ்ரீமான் பாண்டியரே சட்டசபையில் மறுபடியும்அமருவதற்கு எவ்வழிதகுதியோ அவ்வழியை நாடார் மகாஜன சங்கம்கவனிக்கும்படி வேண்டுகின்றோம்.

தவிர, 10 லக்ஷம் ஜனத்தொகையுள்ள ஒரு சமூகத்துக்கு ஒரு பிரதிநிதி போதாதென்பது யாவரும் அறிந்த விஷயம். குறைந்த பட்சம் மூன்று பேர்களாவது இருக்கவேண்டும். நாடார்களின் ஜனத்தொகை அதிகமுள்ள திருநெல்வேலி ஜில்லாவிலேயே சென்ற எலெக்ஷனில் ஒரு நாடாருக்கு வாக்குச் சரிவரக் கிடையாதிருக்க மூன்று பேர்களுக் கெங்ஙனம் வாக்குக்கிடைக்குமென்று சிலர் அதையியம் அடையக் கூடும். திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு நாடார் ஜெயிக்கக் கூடிய வாக்காளர்கள் இல்லாமற் போகவில்லை. அப்பேட்சகர் சரல ஜனங்களிடமும் தாராளமாய்ப்போய் வாக்குறுதியைக் கேட்காதமர்மத்தாலும் தீவிர முயற்சியுள்ள வாலிபக்கோஷ்டிகள் முன்னின்று வேலைசெய்யாத குறைவாலுமே அத்தவறுதல் நேர்ந்திருக்க வேண்டும்.

இராமநாதபுரம் மதுரைஜில்லாக்களின் அபேட்சகர்கள் அப்படியேனும் சோதித்துப் பார்த்தொழியாமல் நின்று விட்டார்கள். இவ்வருஷத்திலும் அப்படியே முன் வரா திருப்பார்களானால் ஒன்றுக்குமே திண்டாட்டமாய்ப் போனாலும்போகலாம். ஏனென்றால் இது வரையும் சட்டசபையை விட்டொழிக்க வேண்டுமெனத்திட்டஞ் செய்து கொண்டிருந்த ஒற்றுமையாக் கட்சியெனும் மின்னலானது ஜஸ்டிஸ்க் கட்சியின் ராஜீய மேதத்தைப் பிளந்து விடவேண்டிப் பெரு முயற்சியெடுக்கின்றது. அது கடவே கூடாதென்று வாதிக்கும் மகாத்மாவின் சிஷ்யர்களான சண்டமாருதமொரு பக்கம் சாடுகின்றது. இப்பயங்கரமான காலத்தில் இஞ்ஞாலத்தின் ஆட்சிக்குச் சாட்சியாய் நின்ற லாயிட் ஜார்ஜ் நேகம் நடுக்கமெடுத்துக்கொண்டது. அந்நடுக்கம் அவருக்குப் பின்வந்தவர்களையும் பற்றிநிற்பதாக வேண்டுகின்றோம். சட்டசபையைச் சமீபத்தில் விட்டுவந்த ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கா ரவர்களும் சென்னை மாகாணத்தைப் பொருத்தமட்டிலும் சட்ட சபையைக் கைப்பற்ற வேண்டியது அவசியமென்று பிரங்கமாய்ச் சொல்லிவிட்டார். சிறந்த தேசீயப் பத்திரிகைகளும், ராஜீய ஞானமு முள்ள அறிவாளிகள் மனமும் சட்டசபை பிரவேசத்தை ஆதரித்தே வந்துகொண்டிருக்கிறது. சட்ட சபையில் ஜஸ்டிஸ்க் கட்சியார் இருந்த ஆசனத்தில் வீற்றிருக்க அநேகர் ஆசைப்பட்டு விட்டார்கள். ஆனதால் இம்முறை பலதரப்பட்ட கட்சியார்களும் பல ஜாதியார்களும் அபேட்சகர்களாக முன் வருவார்களென்பதற்குச் சந்தேக மில்லை.

சென்ற வருஷத்தில் நாடார்களில் வாக்குக்கொடுக்க யோக்கியதையுள்ள ஜனங்களின் பெயர்கள் அநேகம் ஜாப்தாவில் எழுதப்படாமல் விடுபட்டுப் போயிருக்கிறது. இவ்வருஷத்தில் இப்போதே வாக்காளர்களின் பெயர்கள் சாப்தாவில் சரிவர வெளிவருவதற் குண்டான வேலையை முதலாவது ஆரம்பிக்க வேண்டும். பின்னர் அபேட்சகர் இன்னின்னார் என்று நிச்சயம் செய்துகொள்ள வேண்டும். நாடார் மகாஜன சங்கமும் சர்க்குலர் மூலமாக வாக்காளர்களுக்கு வாக்குக் கொடுக்கும் மார்க்கத்தையும் அபேட்சகர்களின் பெயரையும் விளக்கிக் காட்டவேண்டும். இவ் வேலையில் முனைந்து வேலை செய்வோமானால் மதுரை இராமநாதபுரம் திருநெல்வேலி இம் மூன்று ஜில்லாக்களிலும் திட்டமாய் வெற்றிடைக்கு மென்று நம்புகின்றோம்.

குறிப்புகள்.

சென்சஸ் ரிப்போர்ட்டு.

1921ஆ மார்ச்சு மாசம் 18உ எடுக்கப்பட்ட ஜன சங்கை கிடைக்கப்பெற்றோம். அடுத்த மித்திரனில் சென்சஸ் ரிப்போர்ட்டு பிரகாரம் நாடார்ஜன சமூகத்தாரின் முழுவிபரமும் தெளிவாய் பிரசுரிக்கப்படும்.

9-வது மகாநாடு.

நமது நாடார் மகாஜன சங்கம் 9-வது கான்பரன்ஸ் கூடுமிடம் இன்னும் திட்டமாய் குறிப்பிடப்பட வில்லை. இதற்கு முன்நடந்த மகாநாடுகள் எல்லாம் முந்திய மகாநாடுகளில், இன்ன இடத்தில் நடக்குமென்று பிரங்கப்பட்டுப் போகும். ஆனால் 8-வது கான்பரன்ஸில் 9-வது மகாநாடு எந்த இடத்தில் நடத்தறது என்று நிர்மானிக்கப்பட வில்லை. வழக்கப்போல் அழைத்துக் கொள்ள ஒரு ஊர்க்காரரும் முன்வர வில்லை. நாங்கள் நடத்துகிறோ மென்று அழைத்து விட்டு, ஆறு மாதம் போர்சு மேல் சிபார்சு செய்தாலும், யார்க்குவந்த விருந்தோ வென்றிருந்து விட்டு மகாநாடு கூடும் தேதிக்கு இரண்டு மாதகாலத்திற்கு முன், அவசர அவசரமாய் அக்குமிக்கும் அலைந்து திரிந்து, அலுத்து வேர்த்து விருவிருத்துப்போய் மகாநாடு முடிவதற்குள் ஆயாசப் படுவதைப் போலல்லாமல் இப்போதே 9-வது மகாநாடு கூடுமிடத்தை நிட்டமாய் மகாஜன சங்கத்தார்குறிப்பிட்டுவிட்டால்நலமாயிருக்கும். இப்போதிருந்தே 9-வது மகாநாடு சிறப்புடன் நடைபெறவேண்டியகலச்சாதனங்களையும்சாதாரணமாய்ச்செய்துகொண்டு போனால் நலமாயிருக்கும். ஆனால் செப்டம்பர் மீ 5-ம் தேதியில்நடைபெற்ற மகாஜனசங்கக் கௌன்ஸில் மீட்டிங்கில் முக்கடலில் நடத்தப் போதிய வசதியில்லைஎன தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால்தக்கவசதியான இடத்தை சீக்கிரம் மகாஜன சங்கத்தார் குறிப்பிடுவார்கள் என்று நம்புகின்றோம்.

மதிப்புரை.

"நமது குலத் தொழில் யாது"

இந்து நமது சகோதரப் பத்திராதிபர் சென்னை ஸ்ரீமான் த. விஜயதுரைசாமி கிராமணி யவர்களால் இயற்றப் பெற்றது, பல ஜாதிய நூல்களையும் இதிகாச புராணசம்பந்தசாஸ்திரங்களையுங் ஆராய்ச்சி செயதும்தக்கஆதாரங்களுடன் எழுதப் பெற்றிருக்கும் அரியநூல். சுருக்கச்சொல்லின் இது அரசகுலத்தைக் குறித்து எழுதப்பட்ட ஒரு பிரபந்தம். நாடார் குலத்தவர்கள் தங்கள் பூர்வீகத் தொழில் இன்னதென்பதை அறிய வேண்டியது அவசியமாகையால், இதை ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்க வேண்டுமென்றுவற்புறுத்துகிறோம். உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டது. தபால் சார்ஜ் உள்பட ஆறு அணா தான் வேண்டுவோர் நமது ஆபீஸிலும் பெற்றுக் கொள்ளலாம்.

விலாசம்:— பத்திராதிபர்,
சூஷ்த்திரிய மித்திரன்
தண்டையார்பேட்டை
சென்னை.

"நாலடியார்."

இந்து நமது பார்வைக்குக்கிடைக்கப் பெற்றோம். இது பாளையங்கோட்டை சோமசுந்தர காலேஜ் தமிழ்ப் பண்டிதர் கனம் D.மாரில்லாமணி நாடாரவர்களால் இயற்றப்பெற்ற, (அரசியல் ஐந்து அதிகாரங்கள், 131-180) மூலமும்உரையும். இதன் விலை அணா எட்டேதான். இது, 1924ஆம் ஆண்டில் நடைபெற விருக்கும் T. S. L. C. Ele. Higher grade பரீக்ஷைக்குப் போகிறவர்களுக்கு பயன்படும். ஆனால் வேலும் பல்லுக் குறுநிநாலும் இரண்டும் சொல்லுக்குறுநி, என்ற நாட்டு பழமொழிப்படி, பொதுவாக தமிழர் ஒவ்வொருவரும் நாலடியார் வாசிக்க வேண்டியது மிகவும் அவசியமே.

காலத்திற்கேற்ற கோலம்.

ஆசார, அனுஷ்டான, நல்லொழுக்கங்களில் மிகச் சிறந்து, உலகம் உய்க்ஷலங்களை கைக்கொண்டு உய்யுமாறு' சதா வேதபாராயணம் செய்தல், யாகஞ் செய்தல், ஹோமம் வளர்த்தல் முதலிய நற்கிருத்தியங்களைக்கடைப்பிடித்துபவர்களின் பாதாரவிந்தத்தை காண, சதா பக்திமார்க்கத்தில் ஈடுபட்டு, பாவகாரியங்களில் வெறுப்புற்றிருப்பது, முற்காலபிராமணர்களின் செய்கை. ஆனால் நற்கால பிராமணவகுப்பாரின் நடக்கை முற்றிலும் நேருக்கு மாறுவதும் தலைகீழாகவும் இருப்பது பற்றி, விரித்து விபரமாக எழுதுவது அவர்களை தாழிப்பதற்கொப்பாகுமென, விட்டொழிக்கவேண்டிய திருக்கிறது.

• • •

முற்காலங்களில் பிராமணர்களே தெய்வங்க ளென்றும், அவர்கள் சொல்லுவதே தெய்வவாக்கென்றும்,அவர்கள் எழுதுவதையே வேத மென்றும் அவர்கள் விரும்பியதைக் கொடுத்து ஆதரிப்பதே தங்கள் கடமை என்றும் அவர்களை திருப்தி செய்வதனால், புண்ணியமுண்டாகிற தென்றும் அவர்களுக்குச் செய்வதெல்லாம் தெய்வத்திற் கென்றும் எண்ணி, அவர்களிடத்தில் பயபக்தியுடன் நடந்து வந்தார்கள். அக்காலத்திலுள்ள பிராமணரல்லாத இதர வகுப்பினர் ஆனால் இக்காலத்தில் பிராமணரல்லாதாரம்மில் பெரும் பான்மையோர் அவர்களை அவமரியாதையாய் நடத்துவதில் தங்களுக்கோர் மரியாதை என்றும், அவர்களை தூஷிப்பதே, தேவாரம் பாடுவது போலவும், அவர்கள் ஜீவனோபாய மார்க்கங்களை சுயநல குழ்ச்சிகள் என்று அவதூஷிக்கவென, எண்ணும்படி, வெளி பிரசாரங்கள் செய்வதே பொதுஜன சேவை என்றும் எண்ணுங்படியாயிருக்கிறது இக் காலத்தின் கோலமேயொழிய யாரையுங் குறை கூறுவதிற் இல்லை. அவர்கள் செய்வதும் அட்டித்தான், நம்மவர்கள் செய்வது மிப்படித்தான்.

• • •

கொலை, களவு, கள், காமம் முதலிய பஞ்சமா பாதகங்களுக்கு அடிமையான பாவிகளுக்கு கட்டப்பட்ட, காலக்கிரகங்கள் தற்சமயம் பண்டிதர்களும், படித்தவர்களுக்கும், நல்ல மேதாவிகளுக்கும், பொது ஜனங்களால் கல்கு மதிக்கப் பட்டவர்களுக்கும், ஞானிகளுக்கும்உலப்பற்றற்ற நடிந்தயர்களுக்கும் உலக சிரேஷ்டர்களுக்குமே உதவுகின்றது. காலத்தின் கோலம் இப்படி வாசகுது. என்னயிருக்க! என்னவாய் போகிறதோ!அறிவோம், வாசக்கடைநிலோம்.

• • •

முற்காலங்களில், அரசர்களின் ஆக்ஞைகளுக்குள் பட்டு பிரஜைகள் நல்லொழுக்கத்துடனிருந்து வந்தார்கள். அரசர்களும், மண்ணுயிரைத் தன்னுயிர் போல் போற்றிவந்தார்கள். ஆனால் இக்காலத்து அரசர்களைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. இன்பேட்டு ராஜாக்களாய்த்தானிருக்கிறார்கள். பெயருக்கு அரசரே யொழிய ஆணுகைக்குஅரசரல்ல. பிடித்துவைத்த மண்போம்மை போல் தானிருக்கவேண்டியிருக்கிறது. ஜனப் பிரதிநிதிகள், இருக்கச் சொன்ன இடத்திலிருக்கவேண்டும். போகச் சொன்ன இடத்திற்கு போகவேண்டும். இப்படியிருக்க சம்மதமில்லாவிட்டால்,கையில் அகப்பட்டதை சுருட்டிக்கொண்டு, கம்பலேறி,கண்ணுக்குதெரியஇடத்தில்தலை மறைவாக யிருக்கவேண்டியது தான்.

• • •

கள், கஞ்சா, சாராயம், பீடி, சிகரெட், சுருட்டு, முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகப் படுத்துவோர்களைக் கண்டு பிடிப்பதே கஷ்டமாய் இருக்கும் இக்காலத்தில் இவைகளில் ஒன்றிலாவது சம்பந்தப் படாதவர்களைக் கண்டுபிடிப்பதே பெருங்கஷ்டமாயிருக்கிற தென்றால் இதுவும் காலம் செய்கிற கோலந்தான்!

• • •

சயநலக்குருதிச் சமயிகளுள்ளும். சகோதரர்களுள்ளும் கலகத்தை யுண்டாக்கி அவர்களைப் பேதிக்கச் செய்துவரும் மாக்களே மிகுந்துவருகின்றன ரிக்காலத்தில்.

• • •

பெற்றோர் பெரியோர்களுக் கடங்கி நடவாது, அவர்களை மட்டுமல்லாமலின்றி யேபிப்பேசும் பிள்ளைகளே பெருகிவருகின்றன ரிக்காலத்தில்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

பழமொழித் திரட்டு,

அகப்படைபிடித்தவன் தன்னவனுனல் அடிப்பந்தியில் இருந்தாலென்ன, கடைப்பந்தியிலிருந்தாலென்ன! என்பதுபோல, பொன்னாடாம், எந்நாட்டிற்கும் முன்னுடாம் நம் பாரதநாடு, நன்னுடாம். இப்படிப்பட்ட பொன்விளையும் பூமியானது, ஆங்கிலேயர்கள் ஆகியிலிருக்கும் வரைக்கு, அவர்களுடைய இனத்தாருக்கும் தேசத்தாருக்கும் இங்குஎன்னகுறை யிருக்கப் போகிறது? குறைவிருந்தாலும்,விட்டுப்போனுலும்பூர்த்திபண்ணிவைக்கவே, பார்லிமெண்டில் தயாராகக்காத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படியிருக்க நமதுதேசத்திலுள்ள இந்திய ஐரோப்பிசங்கத்தாரும், லிவிலியன்களும், இந்தியாவிற்குமான்டேகுசீர்திருத்தம் கொடுக்கப்பட்டதினுல் தங்கள் சமமதிப்பிற்கும், கௌரவத்திற்கும் எங்கே பங்கம் வந்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள். அப்படி அவர்கள் பயப்படத் தேவையில்லை. ஆகியும் அதிகாரமும் அவர்களுடைய இனத்தவர்கள், கையிலிருக்குமபோது, என் அனுவியமாய்ப் பயப்பட வேண்டும்? ஆறுயிரம் மையிலுக்கப்பால், அனுதியாய், இல்குவந்திருக்கும் அவர்களுக்கு எப்படியும் நிறுதேறதல்சொல்ல வேண்டியது நமது கடமையாகிவிட்டது.

• • •

சுவர்க்கத்திற்கு போகிற போது கக்கத்திலே மூட்டை ஆமா?

என்றது போல், நமது இந்திய தேசத்தில் ஒற்றுமை மிக கெட்டதின் நிமித்தம், நமது நாடு அன்னியர் ஆகிக்குள் பட்டது, இனிகாம் ஒருதாய் பெற்ற பிள்ளைகளைப்போல், ஜாதி,பேதம் மதபேதம், நிறபேதம் முதலிய சகல வேற்றுமைகளையும் அறவே யொழித்து, சுயராஜ்யம் பெற்று சுதந்தரர்களாய் சுயவாழ்க்கை வாழவேண்டு மென்று வாதிக்கும் காங்ரஸ் வாதிகளில் சிலர், ஜாதித்துவேஷம், அகங்காரம், தன்னலம் முதலியவைகளை இன்னும் வெட்கமில்லாமல் கக்கத்திலேயே வைத்துக்கொண்டே அங்கு மிங்கும் அலைகிறார்களே! சுயராஜ்யம் வாமுன் இப்படி யிருக்கிறதே, வந்துவிட்டால் பகவான்தான் பார்க்க வேண்டும், இவர்களுடைய ஆர்பாட்டங்களை! இவர்களுடைய திருக்கூற்றுகளை திருப்பூர் மகாநாடுகளில் தான் காணப்பெற்றோம். ஜாதித்துவேஷப் போலி தேசாபிமானிகளே! உங்கள் கக்கத்திலிருக்கும் ஜாதித்துவேஷ அழுக்கு மூட்டையை யோக்காங்காஸுக்குபோகும் போதாவது கீழே இறக்கிவைத்துவிட்டுப் போங்கள். ஆனுல் நாம் எல்லோரையும், போலிகள் என்று சொல்வதற்கில்லை உண்மையுடன் தேசத்திற்கு நன்மை செய்யவேண்டுமென்று காத்துக் கொண்டிருக்கிறார்கள் அனந்தபேர்கள். ஆனுல்அவர்கள் மத்தியில் பெயரைக் கெடுக்க நாலு, இப்படிப்பட்டபோலிகளுமிருக்கின்றனவே என்றவருத்தமே, நம்மைவாட்டுகிறது,

• • •

பொன் ஊசி என்று கண்ணில் இடித்துக்கொள்ளலாமா?

என்பது போல், கலால் வருமானம் எத்தன்மையுடையதா யிருந்தாலும், கவர்ன்மெண்டார் அதைகவனிக்கலாமா? அதில் எவ்வளவு அதிக வருமானம் கிடைப்பதாயிருந்தாலும், அது ஒரு வருமானம் என்று எண்ணி, கவர்ன்மெண்டார் எதிர் பார்க்கக் கூடாது. பஞ்சமா பாதகங்களில் ஒன்றுகிய மதுபானத்தினுல் பாழடையும் தன் குடிஜனங்களைக் கவனியாமல், தெய்வத்திற்கு ஒப்பான, அரசர் அதினின்று, கிடைக்கக் கூடிய ஊதியம் எவ்வளவாயினும் வெறுத்துத் தள்ளவேண்டும். உலகத்திலுள்ள ஒவ்வொருதேசங்களும்கலால் இலாக்காகளே, இல்லாதிருக்க முயச்சித்து கொண்டு வருகின்றன. ஆனுல், அமெரிக்காவோ மது என்ற மயமே யில்லாமல் செய்து விட்டது. அதுபோல், நமது காருண்ய மிகுந்த கவர்ன்மெண்டார் கருணை மிகக்கூர்ந்து, இந்தியாவிலுக்கலால்என்றஇலாக்காக்களைஅடியோடொழிப்பதோடு,உலக க்ஷேமத்தை யுண்ணியம் தேச நன்மையை எண்ணியும் குல முன்னேற்றத்தைக் கருதியும் மது என்ற நாம தேயமே நம் தேயத்திலில்லாமல் செய்ய முன்நின்ற உத்தமர்களை இன்றே சிறையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று பிராரிக்கின்றோம்.

மனுனந்த மஞ்சரி.

மன்மகள் பொன்மகள் சமேதரான மண்ணுண்ட மூர்த்தியானவர், தமிருமனைவியர் சரிதம் தன்னருமைச் சகோதரியாகிய என்னம்மை ஸ்ரீநடராஜகைப் பிராட்டியைக்காணக் கடப்பவனம் (மதுரை) வருவதறிந்த பிட்டேன்ட பெருமான், தன்று வாகனருடராய் எதிர் கொண்டழைக்க வருவதைப் பார்த்துப் பங்கயர்க் கண்ணர். அஃதோ! என்னே எனது மைத்துனரின் மகிமை எனத்தன திருமனைவியர் முகம் பார்த்து:—

கண்டீரோ பெண்காள்!கடப்பவனத் தீசனுர்
பெண்டீர்களைச்சமந்த பித்தனுர்-எண்டிக்
கைக்கு
மிக்கான தங்கைக்கு மேலே கொருப்பை
யிட்டார்
அக்காளை யேறினுராம்.

எனப் பரிகாசஞ் செய்வதைக் கண்ட ஸ்ரீபரன்டிய குமாரியார், நாதா! நன்றுமது பிழைப்பென்று கைகொட்டி நகைக்க காளைவாகனேஸ்வரர், நல்லோர் பிழைப்பு மானை தெரியுமெனப்பரிதுரைத்துப் பார்த்தசாதியைத் தனதில்ல மழைத்து வந்துபசரித் தனுப்பினுராம். பின்னுள் கழிய அண்ணனைக் காணவேண்டி மலைமகள் தனது மனுளருடன் பிரயாணமாகிக் காஞ்சிவரம் வருவதறிந்த ஸ்ரீவரதராஜப்பெருமாள், தன்னன்புக்கினிய தங்கையையும் மைத்துனரையும் எதிர் சென்றழைக்கத் தனது கருடப் பகழியின்மே லாரோகணித்து வேடிக்கை விளோதத்துடன் வருவதைப் பார்த்த பரமேஸ்வரன், ஐயே! மிக்க மோதாவியாகிய எனது மைத்துனராம்:—

பெருமாளு நல்ல பெருமா னவர்தங்
திருநாளு நல்ல திருநாள்—பெருமாள்
இருந்திடத்திற் சும்மா யிராமையினு
[லேயோ
பருந்தெடுத்துப் போருதே பார்.

எனக்கூறிக் கைகொட்டி நகைத்தலும், தேவியார் திருவுளம் வெட்கிநிற்கவும் பார்த்த பகழியானவர், தங்கையே எனது மைத்துனர் என்னை யேனனுஞ் செய்வதற்கு நின்னகம் வெட்கக் காரணமில்லை யென்றுரைத்து இடபாருடரைத்தன்னிடங்கூட்டிச் சென்று விருந்துபசாரஞ் செய்து வழியனுப்பினுராம். இச்சம்பந்திகளின் திருவிளையாடல் நம் பக்கலிருக்கட்டும்.

கல்லூர்நண்பன்.

பெயர் பொன்னப்பன் தான், கையில் கால் காசுகூடக் கிடையாது என்பதைப் போல், நாடார்கள் ஜனத்தொகை பத்து லக்ஷமாம். ஆனுல் 10 லக்ஷம் ஜனத்தொகையுடைய நாடார் ஜனசமூகத்திற்கு பிரதிநிதியாயும்பிரதமமாயும் விளங்கும் நாடார் மகாஜனசங்கத்திற்கு அங்கத்தினர் சளின் தொகையைக் கவனித்தால் வெளியிற் சொல்ல வெட்கம். நாடார் மகாஜன சங்கத்தார் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி முயச்சி எடுத்துத்தான் பார்க்கிறார்கள், இன்னும் முவ்வாயிரத்திற்கு வழியில்லை. இப்படிப்பட்ட நிலைமையில் நாம் நமது சங்கத்தை வைத்துக் கொண்டு, எடுத்த காரியத்தை சாதித்து விடலாமென்ற வீண் எண்ணத்தை விட்டொழிக்கவேண்டியதானிருக்கிறது. ஆகையால் நாடார் குலத்திலுதித்த உத்தமர்கள ஒவ்வொரு ஆணும், பெண்ணும் இன்றே நமது மகாஜன சங்கத்திற்கு அங்கத்தினராகச் சேரமுன்வாருங்கள்.

• • •

பொன்னுபரணத்தைக் காட்டிலும், புகழாபரணம் பெரிது

என்பதை நாடார்குல வாலிபர்களே! நன்கு கவனியுங்கள் எதிர்காலத்தில் ஏற்றம் பெற்று விளங்க இருக்கும் நாடார்குல வாலிபர் சிங்கங்களே! கவனத்துடன் எழுந்திருங்கள் குலமுன்னேற்றத்திலீடு படுங்கள் உலக மாயையில் மயங்காதிருங்கள். பொன் மண் பெண் எல்லாம் பொய்த்தோற்றம் எல்லாம் அநித்தியம் என்பதை அறியுங்கள் பூத உடம்பு அழியும், புகழ்உடம்பை நிலைநிறுத்த முயலுங்கள் தோன்றிப்புகழொடு தோன்றுக அஃதோர் தொன்றலிர் தோன்றுன்மை கன்றுஎன்று தெய்வபுலமை திருவள்ளுவரனுர் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்.

சுகோதய நிருபரின்கூற்று

நயவஞ்சகயோசனை

போலித் தேசாபிமானம்

நாடார்கள் பிரத்தியேகமான கோயில்களை கட்டிக்கொள்ள வேண்டும்

தாயாதிகள் காய்ச்சலினுல், நகப்பன் சீராத்தத்தை வீட்டுவிடக் கூடாதாம்!!

தவறின்மேல் தவறும் அரைகாம்பின் அம்பலமாம்

என்னே இவரின் கூற்று!

"நாடார்களும், கோயிலும்"

மேற்கண்ட மகுடமிட்டு தோபிராவியெனும் புனைப் பெயருடன் கார்த்திகைமீ 22உ வெளிவந்த சுகோதயம் என்னும் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கும் விஷய முழுவதும் படித்துப்பார்த்து தேசாபிமானி தெரியாமல் மொழிந்த சில விஷயங்களுக்கு அறிவுறுத்தலவசியமென்றே முன் வந்துள்ளோம்.

நாடார்கள் கோயிலுக்குள்ப் பிரவேசிப்பதைப்பற்றி நாடார்குல மித்திரன் கார்த்திகைமீ 16உ தலையங்கத்தில் கடின சொற்களைப் பிரயோகித்திருக்கிறது என்று மட்டும் சொல்லி விட்டு, அக்கடின சொற்களை விளக்கிக் காட்டாமல், தம்முடைய ஆராய்ச்சியைப் பற்றி ஆரம்பித்து விட்டார். அவருடைய ஆராய்ச்சி தான் எவ்வாறுள தென்பதைப் புகுந்தாராய்வாம்,

நமது தேசத்திலுள்ள நாடார்கள் யார் என்றும், அவர்கள் பரம்பரை எதுவென்றும், பாண்டிய நாட்டிலுள்ள நேவாலயங்கள் நாடார்களின் முன்னேர்களாகிய பாண்டிய அரசர்களால் கட்டப்பட்ட தென்பதையும் உணராமல் தேசாபிமானிக்கு அவர் மாமனுர் தந்த தெனத் தேவாலயம் போல் நினைத்துக் கொண்டே, வினவும் விடையும் தடையில்லாமல் அவரே சிருஷ்டித்துக் கொண்டு போகிறார்.

வேற்றரசர் படையெடுப்பால் ஏற்றமிழந்த நாடார்கள் தங்களுடைய உரிமைகள் தங்களுக் கெப்பொழுதேனும் கிடைக்கும் உலகத்தில் எப்போதும் புல்லர்களாகவே யிருக்க முடியாது என்றும், நல்லோர்களும் உத்தமகுணமும், உண்மைத் தேசாபிமானமும். தத்தீவ னுன முள்ள பத்த சிரோன்மணிகளும் தோன்றுங்கால் உண்மை வெளியாகுமேன்று மௌனம் சாதித்திருந்தனரேயன்றி, எந்தமகா நாட்டிலாவது போய் நின்று ஆலய உரிமையை யாசகம்யாய் கேட்கவுமில்லை. கேட்க விரும்பவுமில்லை ஆனுல் நல்லோர் வருகையை நாடிய நாடார்கள் நன்மனதுக் கேற்ப, உண்மைத் தேசாபிமானிகள் தேசத்தை ஒன்று சேர்க்க முயற்சிக்கும்போது, நாடார்கள் உள்ளுணர்ச்சியையும் ஒத்துழைப்பையும் மதித்து உண்மையை மறக்காமல் நாடார்கள் விஷயத்தை உண்மைத் தேசாபிமானிகள் ஆமோதித்தும், ஆதரித்து யிருக்கிறார்கள். போலித் தேசாபிமானிகள் மறுத்து வந்திருக்கிறார்கள்; இதைப்பற்றி நாடார்கள் ஒன்றும் செய்யப்போவதில்லை. ஆனுல் வாதிட்டோர் மந்தமதியை நினைத்து யாவருமே வருந்தக்கூடும்.

முதலாவது, நிர்மானத்தின் வரலாறுதில் அமைதியான முறையில் என்பதற்கு அர்த்தங்கண்டு பிடிக்க நமது தேசாபிமானி ஆரம்பித்து "நாடார்கள் நிர்மானம் நிறைவேறியவுடன் பாண்டிய நாட்டு ஆலயங்களில் பிரவேசித்து விடலாமா? அல்லது என்னென்ன பூர்வாங்க வேலைகள் செய்து முடிக்க வேண்டும்? ஜாதிக்காய்ச்சலும் உயர்வு தாழ்வு என்கிற பேதபுத்தியும் மாறி நிர்மானத்தைத் ஆதரிக்கக் கூடிய மனோநிலைமை பாண்டிய நாட்டில் யேற்பட வேண்டாமா? தர்மகர்த்தாக்களுடன் ஆலோசனை செய்து எந்த வழியில் போனுல் அமைதியாக நிர்மானத்திலுள்ள லக்ஷியம் நிறைவேறும்? என்ற விஷயத்தைச் சரியாய்க் கவனியாத குற்றம் ஒன்று, நிர்மானத்தைப் பிரேரணை செய்தவர்களும் ஆமோதித்தவர்களும் ஆத்திரமாய் சாஸ்திரங்கள் பல யிடங்களுக்கும் பலவிதமாகவா யிருக்கிறதென்று கேட்டது இரண்டாவது குற்றம்" என்கிறார்.

நமது தேசாபிமானியின் தர்க்க ஞானம் எவ்வித மிருக்கிறதென்றால் வேளாண்மையை விருத்தி செய்ய மேற்கொண்டா னொருவன் பருவகாலத்தில் நாற்றங்காலில் விதைவிதைப்பதை விட்டு வயலில் தழை போட்டு தெளிகலக்கி களத்துக்கு சாணக் தெளித்து தயார் செய்து கொள்ள ஆரம்பித்தது போலிருக்கிறது. நாடார்களுக்குச் செய்யப்படுகிற நிலைகள் எவ்வித ஞாய முறைகளுக்கும், சாஸ்திர முறைகளுக்கும் தமாறுதென அறிந்த பரிமாண கூக்ஷர முதலியாரவர்களும், இராமசாமி நாயக்கரவர்களும் நிர்மானமானது ஒரு காரியத்தை வேற்ற ஆரம்பிக்கு முன் பெரியபிராயம் எவ்வித மிருக்கிறதிய விருப்பித் தயாரித்த தொராதாரண புத்தியுள்ள யாவரும் அறியும்படி தெரியவாய்எழுதப்பட்டு நமது தேசாபிமானி வேண்டு குழுப்பத்தை யுண்டாக்கக்கருதி சமூகத்தினர் என்பதில் நாடாரை விட்டு விட்டு தாம் செய்தலை மறைக்க தவறின்மேல் தவறு தூற்றுகிறார், ஆகவே, தவறுமேனக்காட்டியிருப்பதை எவருக்கொள்ளவே முடியாது.

தேசத்தினர் பிரதிநிதிகள்சபை சொல்லப்படுகிற காங்கரவின் ஸ்ரீனக் கிளைச் சபையானது தன் ஆதிபத்தியத்துக்குள் நடக்கிற ளை பரிகரித்துக் கொள்ள முயற்றது, சாஸ்திரபரி சிலனை செய்வ சாஸ்திரங்கள் சொல்லுகிற தெய்வஜாலஞ் செய்வோர்கள் காட்டுகிறிகள் நீதிக் ,கொய்வாதா யிருக்கிறதை மாற்றுவதற்கும் ஆக்ஷேபஞ்கிற சுயாலப் பற்றும், வஞ்சகத்தை நிறைந்த தேசாபிமானிகள் தான் சகோதரர்களே! நீங்கள் காங்கரஸுக்கு சேருங்கள் சுயராஜ்யம் வந்து விடுகிறது தடுவே உங்கள் குறைகளை யெல்லாம்முடைய வீட்டில் நாமே சரிகொள்ளலாமென்று வாய்கூசாமல் சொல்லுகிறார்கள், வீட்டில் நிறைகுந்து கொள்ளையடித்துக் கொண்டு சுமையைத்திலுங்கூட தன் சுமையுங்கூட பக்கிட்டுத் தலையென்று சொல்லச் சம்மதப்பட்டோரவேயன் திருடனைத் தூத்திய பங்கிட்டுக் கொடுப்பார்களா எல்லாம் உலகமன்றே சொல்லும்.

"நாடார்களுக்கும், கோவிலுக்கும் சாஸ்திரம் ஒன்றுதான் நிறைகட்டுப்பாடுகள் நிறுவின்றனவா அதுபேதபுத்தி கொண்ட மனமா" என்கிறார் காலச்சக்கரச் சுழலிலே வந்தகட்டிலு நிற்கிறதென்பதை, தேசாளி நிந்தித்துப் பார்க்க வில்லை. உண்மையை அசைக்க வல்ல ஜெர்மானியைச் சின்னுபின்னுஞ் செய்த ரெல்லாம் அங்கோராவின் ஆட்சிகளால் ஆட்டிவைக்கப்படுவதையுமோப்பாவின் முடிமன்னர் சிலர் யோடொழித்ததையும், தேசாபிமானியோடு கவனிக்கட்டும். பாண்டிட்டு விவகாரத்தை அவர்களே தீர்க்கொள்ள வேணுமென்று துடிக்கிறுகின்றார். அப்படியானுல் பாண்டிய நாட்டு விவகாரத்தில் பாண்டிய ராச் தலையிட்டது ஆண்டிகள்கூடு மாளிந்த கதைபோலல்லவா முடியும் என்பதை தேசாபிமானி மறந்துவிடார்.

மேலும் வயிற்றுப் பிழைப்புக்கும் வழிகாட்டக் கூடிய இராஜாங்கமாமல், ஆன்மலாபத்தையும் தரத்தகுமதசம்பிரதாயத்தைத்தழுவிய இராங்கமாயிருக்க வேண்டு மென்றல்லா மகாத்மா காங்கரஸ் யந்திரத்தை, மாற்றிலும் திரும்பும்படி செய்திருக்கிறார் என்பதை சற்றேனு முணரமல் ஏதோ பிதற்றுகின்றார். "வல்லான் வகுத்தே வாய்க்காலெனும் - பெருவழக்கு விழுக்குமுண்டோ" என்ற முதுமொழிக்கேற்ப மகாத்மா தம்முடைய ஆளுமையாலும் நாவன்மையாலும், தேசாபிமானியின் போக்கை ஒறே அடியாக மாற்றி விட்டார் என்பதை மறியாமல் சாஸ்திரத்தை மாற்றுவது சங்கராச்சியாராகாங்கரஸா சட்டசபையா வெகுண்டெழுகிறார்கள். சாஸ்திரம் காலத்தினுக்குத்திப்படும் பிராம்மணர் குட்டிக்கா தென்றே உலகம் கூறித்து வருகிறது. ஜாதிபத விஷயத்திற்கும்காங்கரஸுக்கும் சம்பந்தமில்லை யென்றால் கலாவிஷயம் எதுவென்று தேசாபிமானியோடுகின்றார் என்பது வினுக்கலிக்கிலபத்துக்கு அநுதாபிப்பது வெறு

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

ர்மானங்கள்தான் என்று தேசாபிமானி என்றாலிருக்கிறார். அல்லது மகாஜன சபை வருவதற்குள் காங்கரவிலிருந்து வரும் கருத்தாவின் மதக் கொள்கைகளை மாற்றிவிடலாமென்று நினைக்கிறார்? சாத்தியமாகுமா? பார்த்துக் கொள்வோம்.

மேலும் காங்கரஸ் தேசாபிமானசபையிருக்கால் அது என் இனங்களுடைய குணம் குற்றங்களை ஆராய்ந்து நிர்மானிக்கக் கூடாது? காங்கரஸ் சபைக்கு யோக்கியதையில்லையென்றால் அதுவல்லவிதம் தேசப் பொதுச் சபையாகும்? பிரஸ்தாப விஷயத்தைத் நிர்மானிக்கும் யோக்கியதையுள்ள கல்விமான்கள் சபையில் இல்லையென்று தேசாபிமானி சொல்லுகிறார்? கல்வியும் யோக்கியதையும் உடையவர்களே காங்கரவில் இருக்கிறார்களென்றால் அவர்கள் செய்யும் நிர்மானத்தை ஆக்ஷேபிப்பார்களா? ஆக்ஷேபிக்கக்கூடிய ஜனங்களிருக்கிறார்களென்றால் அவர்கள் சுயராஜ்யம் வேணுமென்று யாருக்காகக் கேள்க்கிறார்கள்?

அரசியல் விவகாரங்களில் சகலபேதங்களும் அழிய வேண்டுமென்று சொல்லிவிட்டு நாடார்களுக்கும் உயர்குலத்தவரென்றழைக்கப்படும் பிராமண பிராமணரல்லாதாரென்போருக்கும் இதரமதஸ்தர்களுக்கும் யாதொரு உயர்வு தாழ்வும் கூடாது என்கிறார். இந்த யிடத்தில் தேசாபிமானியின் திருட்டுத்தனம் வெளியாய் விட்டது. நாடார்களை பிராமணர், பிராமணரல்லாதாரிலிருந்து பிரித்துக் கூறியதுடன் பிராமணர், பிராமணரல்லாதாருக்கு உயர் குலத்தவரென்று அழைக்கப்படும் என்ற அடை மொழி கொடுத்திருக்கிறார். உயர்வான இவ்விரு வகுப்பினரிலும் வேறுபட்ட ஒருதாழ்வான என்று அர்த்தங் கொள்ளும்படி வெகுசாமர்த்தியமாக நழைத்திருக்கிறார். மதவிஷயங்களிலும் ஒன்றுபட்ட உண்மை உறவாடல் தொடுதல் முதலியவைகளில் தாரதம்மியமின்றி ஒத்துப்போதல் யாதொரு கஷ்டமுமில்லை என்கிறார். பட்டப்பகலிலே பசு வென்றும் எருமை யென்றும் அறியமுடியாத குருட்டுத்தனம்இன்னும் இவரைவிட்டு நீங்கவில்லை போலும். ஆங்கிலத் துணிவாக்கவின் மடைப்பள்ளி வேலையி லமர்ந்திருக்கும் ஆதிந்திராவிடர்களின் முன்பு, தேசாபிமானி பேசுகிறவர்களின் கட்டுப்பாடுகளுக்கு கேட்டு வைத்துக் கொள்கைகளும் பழந்து உதிர்ந்து வந்திராக்கிறதையும் வருகிறதையும் உலகமெல்லாம் அறியுமே! தேசாபிமானி சொல்வதுபோல் அதற்காகப் பிரயத்தனம் செய்ய வேண்டியதில்லை. இனி அச்குய்ய மந்ரய ஞாயிரன் முன்னிற்க முடியாது. மதவிஷயங்களில் அவரவர்கள் ஜாதிக்கட்டுப்பாட்டை ஒழிக்கமுடியாதென்றால் அதற்கு மாறாக யார்தான் எந்தச் சட்டத்தை விதிக்கக்கூடும் என்கிறார் எந்தச்சட்டத்தையாவது விதிக்க வேண்டுமென்று எந்த ஜாதியாரும் விரும்பவில்லை. காலத்துக்கேற்றவாறு காங்கரஸ்தானே விதித்துக் கொண்டு போகிறது. ராஜிய அமைப்பில் நமது பூர்வம் துலங்க வேண்டிய மதத்தையும் கோர்வை செய்து தேசியாழ்வில் சகலரும் சமத்வம் காட்டிக்கொண்டு போவதே லௌகீயமான முறையாகுமென்றே உண்மைத் தேசாபிமானிகள் காங்கரஸை உருவகப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதற்கெதிரிலடியாக எதப் பேரியின் போய் குறுக்கே விழுந்து, ஒரேதானுக்கட, கால சக்கரமானது மிகிந்து நசுங்கிவிடக்கூடும். வேற்றுமையை உடைய பலரும் ஒத்துப் போகும் காங்கரஸ் தடைசெய்யாதுவன்கிறார். ஒர்ருப்போக வேண்டித்தான் உண்மைத் தேசாபிமானிகள்ழைக்கிறார்கள் என்பதை உரை வில்லை போலும்.

அவிந்தஞ்சாப்பிடப் போன கோயாளி யொருவன் அரிசியும், கஞ்சாவையுந்தின்று, அரிசியமுற்று பெருகோயைத் தருவித்துக் கொண்டானாம்போல் தாயமேல் தவறை நிங்கோளோன் கூறப்புகுந்த நமது தேசாபிமானி மதுவுண்டவனடென மயங்கி, பெருக் தவறுதல்கொடிமாக மொழிந்த ஆயாசகார்த்தைகள் அத்தனையும் தொலைவிட்டு ஆராய்ச்சியின் முடிவிலுள்ள இரண்டொரு விஷயங்களை விளக்கிச் சுருக்கி முடிப்போம். நிண்டாணமையை ஒழிக்க காங்கரஸ் உத்தேசித்து அரியலில் சமத்வமும் சகோதரத்வமும் ஏற்படவேண்டுமென்று, அது விருப்பினால் ஆதிந்திராவிடர்கள் கோயிலுக்குள் பிரவேசிக்க வேண்டுமென்றால் பந்திபோஜனம் விவாகம் சம்பந்தங்கள் பல ஜாதியாருக்குள் அனுஷ்டிக்கப்படவேண்டுமென்றால் காங்கரஸ்சொல்லவில்லை என்கிறார். அப்படிச் சொன்னதாக யாரும் சொல்லவில்லை. விவாக விஷயம் நமது தேசத்தில் அவரவர்கள் ஜாதிக்குள்ளேயே மறவதலை ஒதுவிர்த்து வேறொன்று மற்றொன்றுடன் ஒன்று நினைத்து மறவிக் கொள்வாரு எவ்வாறு ஜாதி யேற்பாட்டை கலைத்தானே விளங்கும். பணத்துக் காசை கொண்டு பெற்ற பெண்ணை மற்றொரு மதத்தனுக்கு விற்கிறியம் பண்ணும் பரமலோபிகளும் இடையிலிருக்கலாம்.

ஆனால் அரசியல் விவகாரம் (பிராமணப் பெண்ணை சேரியில் வைத்து மணமுடித்த ஒரு வெள்ளைக்காரன்) நடத்திக் காண்டதைப் போல் அரண்மனையைப் பள்ளியிலிருந்த ஒரு ஆதிந்திராவிடனும் நடத்திக் கொண்டால் நமது தேசாபிமானி தீப்பற்றிக் பிடிக்க வேண்டியதைத் தவிர மேற்செய்யப் போகிற காரிய மொன்றுமில்லை. மகாத்மா காந்தியும் நிலகரும் வருணுச் ரிமதருமத்தை ஒப்புக் கொண்டிருப்பதை தமக்குச் சாதகமாக எடுத்துக் காட்டுகிற தேசாபிமானி மகாத்மா திருநெல்வேலியில் நாடார்களின் உயர்ஞாரிலை உணர்ந்து நாடார்கள் காங்கரஸோடு ஒத்துழையாத தத்துவத்தையும், விளக்கி காங்கரஸ்காரர்களுக்கு போதித்த வாக்கியங்களை மறந்து விட்டது ஆச்சரியம்! பாவமென் செய்வார்!! அருகுடைய ஆரியச்சியும் அனுபவமும் அவ்வளவேயாம்!!!

இந்தியர்களுக்கு சமத்துவங்கிடைக்க வேண்டுமென்று, ஆஸ்டிரேலியாவிலப் போய் கனம் சாஸ்திரியார் வெகுபாடுபட்டு வந்திருக்கிறார். தேசாபிமானியோ இந்தியாவின் ஆலயவழிபாட்டில் வைதீக இந்துக்களை ஒழிபடவிட மறுத்துக் கூறுகிறார். நியூஸிலாண்டில் ஒருவர் கனம் சாஸ்திரியாரைப் பார்த்து உம்முடைய தேசத்தில் உங்கள் தேசத்தாருக்கு உம்முடைய கடமையைச்செய்யத் தவறிவிட்டு அந்நிய நாட்டில் வந்து ஆயாசப் படுகின்றீரி என்று இடித்துரைத்திருப்பதை தேசாபிமானி தேர்ந்திருப்பாராயின் தப்பாரிந்தமான வார்த்தைகளைச் செப்பமடைமொப்பியிரார். கடையொக நாடார்களுக்கு ஒரு நல்லயோசனை சொல்கிறார், கோயிலுக்குள் வரக்கூடாதென்று தடை செய்தால் அதைப்பலிஷ்கரித்து விட்டு வேறு கோயில்களை ஸ்ருஷ்டித்கொள்ள வேண்டுமாம்! என்னே தேசாபிமானியின் யத்தமிழ்! அப்படியானால் 60000 ரூபாவை சாப்பிட்டுக்கொண்டு ஆஸ்டிரேலியா கண்டத்துக்கு கனம் சாஸ்திரியாரை என் அனுப்பவேண்டும்? அந்தத் தேசத்தில் குடியிருக்கிற இந்தியர்களுக்கு யோக்கியதையில்லையென்றால்பலிஷ்கரித்து விட்டு, சுயதேசத்துக்கு வந்துவிடவேண்டியதுதான். சுயதேசத்திலும் சுயராஜ்யத்துக்கு பாத்தியதை கிடையா தென்றால் அயல் தேசத்திற்குப் போய்ச் சேரவேண்டியதுதானே!

இதற்கேன் தூது? நமக்கேன் மகாகாடு? நாமேன் தேசாபிமானி? அஃகுமிகும் நாய்போலவேண்டு, பேய்போல் பிதற்றித் திரியவேண்டியதுதான் என்று சொல்லுவதைப் போலிருக்கிறது தேசாபிமானி நாடார்களுக்குச் சொல்லியிருக்கும்யோசனை யாருடைய ஆத்தான் கொட்டை நூற்றுக் கட்டிய கோயிலென்று தேசாபிமானி எண்ணிக் கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை.

இறுதியாக நாடார்கள் சம்பந்தப்பட்டவரையில் நமது தேசாபிமானிக்கு ஒன்று சொல்வோம். நாடார்கள் க்ஷத்திரிய குலத்தவர்க ளென்று ஒப்புக் கொண்டு சங்கராச்சாரிய சுவாமியின் வெகுகாலத்துக்கு முன்னரே சத்தியோஸா தாயமடாதிபதியவர்களுக்கு செய்யும் பட்டையமூலம் சாசனஞ் செய்து கொடுத்திருக்கிறார்கள். மதவிஷயமான சாஸ்திரங்களின் பூர்வநூல்களாயாவது, நவவெண்பா, காலடியார், இராமாயணம், மஹாபாரதம், முதலிய நூல்களாயாவது தேசாபிமானி கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தாரானால், நாடார் என்னும் பட்டப்பெயர் யாருக்கு வழங்கப்பட்டிருக்கிற தென்பதையும் அவ்வழியினர் யாரென்பதையும் அறிந்து கொள்வார். பாண்டியநாட்டிலுள்ள தேவாலயங்களிலும், சிவவிடங்களில் மாத்திரம் சட்டப்பாகெனிருப்பதையும் கழுதி கொயில் கேல் நடக்கும்பொழுதுகூட மதுரை, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களிலுள்ள தேவாலயங்களில் நாடார்கள் எவ்வித தடங்கலுமின்றிப் போய் வந்தார்களென்றும் இன்னும் ஷை தேவாலயங்களில் நாடார்களுடைய உரவின் முறை கட்டளைகள் நடந்துவருகிற தென்பதையும் அறிந்திருந்தால் நமது தேசாபிமானி சாஸ்திரம், வழக்கம் என்ற சொல்லி வருந்தமாட்டார்.

நாடார்கள் தாழ்ந்த ஜாதியார்கள் போலவும் அவர்கள் சமத்வமடைவதற்கு நமது தேசாபிமானின் மோன்றவர்கள் ஒத்தாசை செய்ய வெகு பாடுபடுவது போலவும் எழுதுவதைவிட்டு நாடார்ஜாதியார்களின் பரிசுத்த க்ஷத்ரியத்தையும் அவர்கள் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் சிற்றரசர்களாக இப்போதும் விளங்குகிறார்க ளென்பதையும் பரபத்தை தெரிந்து புண்ணிய காரியங்களில் எப்போதும் ஆசை கொண்டு தங்கள் தீவிய காலங்களில் தங்களுக்குப் பிறர் செய்யும் எவ்வித இங்குகளுக்கும் பதில் செய்வதற்கு நினையாமல், கஷ்டங்களை ஜெயித்து முன்னேறும் இயல்புடையவர்களென்பதையும், அவர்கள் வசிக்கும் இராமங்களிலுங்கூட ஒரு கணேசர் ஆலயமாவது கட்டாயம் இருந்துநீரு மென்பதையும் ஆராய்ந்து பார்த்தார்களானால் தாங்கள் செய்து வந்திருக்கிற தூக்கிருத்தியங்களுக்காக வருந்தாம லிரார்களென்பதை உதாரியாய்ச் சொல்வோம்.

மஹாத்மா காந்தியும் லோகமான்ய திலகரும் ஒப்புக்கொண்டும் சாஸ்திர விதியான பரிசினை செய்யவேண்டுமென்று நமது தேசாபிமானி போன்றவர்கள் பிரியப் படுவார்களானாலும் அதற்கு நாடார் ஜனசமூகம் தயாராவிருக்கிற தென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

உண்மைத் தேசாபிமானி.

குறிப்பு:—இதைப்பற்றிய மறுப்பு விமர்சனங்கள் பல நமக்கு வந்திருக்கிறதாயினும் தற்போது இதை ஒன்றையே பிரசுரித்துள்ளோம். சுகோதயத்தில் தேசாபிமானி எழுதிய, முழுவிபரத்தையும் மற்றொருபக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம். (ப. ர்.)

வீண் விரையமேன்?

நிலகர் சுயராஜ்ய நிதி.

நிலகர் சுயராஜ்ய நிதி யென்ற பெயருடன் மஹாத்மா காந்தியவர்கள் இரண்டொருவர்களுக்கு முன், ஒரு நிதி ஏற்படுத்தினா ரென்பதும், அந்த நிதியைக் கொண்டு இந்தியாவின் சுயராஜ்யத்துக்கான முயற்சியைச் செய்து, கூடிய சீக்கிரம் சுயராஜ்யம் அடைந்து விடுகிறதென்றும், அதற்காக சில நிர்மாணவேலையை பொது ஜனங்கள் நிறைவேற்ற வேண்டுமென்றும், வேண்டுதல் செய்தாரென்றும், அவரிடத்தில் பொது ஜனங்களுக்கிருந்த நம்பிக்கையாலும், பக்தியாலும், பலர் ஆதாவிசளிலுமுள்ள பிரபல வியாபாரிகளும், மார்வாரிகளும் பெண்மக்களுங்கூட தங்கள் அணிகலமுள்பட பணத்தை, வாரிவாரிக்கொடுத்தார்களென்பதும், ஒரு ரீக்கிரத்தில் ஒரு கோடிக்கு மேற்பட்ட பணஞ் சேர்ந்து விட்டதென்பதையும் நாம் அறிந்ததே.

அவ்வளவு பெருந் தொகையை பலரும் இஷ்டமாய்க் கொடுக்க முன் வந்ததிலிருந்து, மஹாத்மா, இந்திய மக்களுக்கு சுயராஜ்யம் கிடைக்க வேண்டுமென்றிருக்கிற ஆசையின் அளவை நிச்சயப்படுத்திக் கொண்டு இந்தியர்கள் சுயராஜ்யம் பெறுவதற்கு இன்றியமையாத சாதனமென, கையால் நூல் நூற்று கையால் நெய்துள்ள சுதருடையையே, எல்லோரும் உடுத்தவேண்டுமென்றும், இப்போதுள்ள அரசாங்கப் பள்ளிக் கூடங்களில் படிப்பதை விட்டு விட்டு, தேசீயப் பள்ளிக் கூடங்களை யேற்படுத்தி அதின் மூலம் சுதந்தர வாசலையை உடைய கல்வியைப் பெறவேண்டுமென்றும், கோர்ட்டுகளில்போய் வழக்காடாமலும், வக்கீல்களிடத்தில் போய் அலைந்து திரியாமலும், பஞ்சாயத்துச் சபையினை யேற்படுத்திக் கொண்டு அதின் மூலம் விபகாரங்களை த்தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், வக்கீல்கள் பிரிட்டிஷ் நீதிஸ்தலங்களில் ஆஜராகாமல் தங்களுடைய தொழிலை விட்டு வேறு உபயோகமான தொழில்களை கைக்கொள்ள வேண்டுமென்றும், அரசாங்கத்தாருடைய சட்டசபைகளில் பிரவேசித்து ஒத்துழைக்கக்கூடாதென்றும், நீண்டகாலமாய் ஒழிக்கவேண்டுமென்றும் பலதிட்டங்களை பகட்டலைகளிலும் மேற்படித்தி, இந்தியன் காஷனல் காங்கிரஸ் சபையிலும் தூப்புக் கேள்ளும்படி செய்து, இவைகளை நிறைவேற்றுவதற்கு நிலகர் சுயராஜ்ய நிதியிலிருந்து மாகாண வாரியாக பணங்களை பிரித்துக் கொடுத்து, மாகாண காங்கிரஸ் கமிட்டிகளே! அவைகளை முடிவுபடியும் ஏற்பாடு செய்தார்கள்.

யிருகு அந்த வேலைகள் முறைமாய் நடப்பதற்காக காரியகமிட்டிகளும் நியமித்து வேலை நடந்து வந்தது.

நாளது வருஷத்திய கணக்குகளைப் பரிசோதித்த ஆடிட்டர்கள் ரிப்போர்ட்டுகளையும் மாகாணங்களின்பரவ்ன் ஜில்லாக் கமிட்டிகளில் நடந்த விவரங்களையும் சுவனித்தப்பார்த்தால், முக்கிய மாய் வேலை மாகாணத்தில் ஷை பண்மானது பலவிதமான போர்களுடன் சுயலப் பிரியர்களாலும் போலித் தேசாபிமானிகளாலும் லீண்ணியஞ் செய்யப்பட்டே, மதுவிலச்சூட்பிரசாரஞ் செய்தவர்க ளென்றும், தோண்டர்படையைச் சேர்ந்தவர்களென்றும், பலருக்குத் தீரவியங்கள் கொடுக்கப்பட்டு ஜெலீஷுக்கனுப்பப் பட்டிருக்கிற தென்றும், உண்மைத் தேசாபிமானமுடைய சிலர், தங்களுடைய தேசாபிமான ஆவேசத்தால் மாசம் இருபது ரூபாய் சம்பளத்திக்க முடியாதசிலருக்கு அவர்களுடைய குணிதசயங்களையாவது வஞ்சனைகளையாவது ஜாதித்துவேஷம் நிறைந்த ஹிருதயத்தையாவது சோதிக்க முடியாமல், அவர்களுடைய பெச்சில் மயங்கி ஐம்பது ரூபாய்வரை சம்பளம் கொடுத்து காங்கரஸ் வேலையை நிறைவேற்றியிருக்கிறார்கள். பெரியமனித ரென்று பறை சாற்றி அவர்களிடம் ஆயிரம் இரண்டாயிரம் என்று பணத்தைக் கொடுத்து கதர் பிரசாரஞ் செய்யச் சொல்லிவிட்டு கடைசியில் பணம் வேணுமென்றால் வகை சொல்ல முடியாமல் திணறுவதும், பணத்துக்காக சிலகுடியர்களும், கேவறியர்களுமான தொண்டர்க ளென்று சேர்ந்து பலயிடங்களில் பெரிய தொந்தரவையும் இழுத்து வைத்து விட்டு மஹாத்மாவின் பெருமைக்கு மாசுண்டாகும்படி செய்து நிலகர் சுயராஜ்ய நிதி என்று வெறும் கேட்டைக் காட்டக் கூடிய நிலைமையுமு வந்து விட்டது.

மஹாத்மாவோ பேரியோர்களுக்கு இயல்பாயுள்ள குணை அமைதிப்படி எல்லோரும் தன்னைப் போன்ற உத்தமர்களென்று நம்பி மோசம் போய் விட்டார். இந்திய மக்கள் தங்கள் பூர்வ நாகரீகங்களைக் கைவிட்டு வஞ்சகச் சித்தமும்பகைமையுங் குடிகொண்டு மனதில் நரகம் புதைந்து கொண்டிருக்கும். இயல்புடையவர்களையும், அழிந்து கொண்டிருக்குந் தன்மையுடையவர்களையு மிருக்கிறார்க ளென்பதை மஹாத்மா உணர்ந்திருந்தால், நிலகர் சுயராஜ்ய நிதி இவ்வளவு கணிசமடைந்திருக்மா தென்பதை அறிந்து கொண்டிருப்பாரன்றோ.

மஹாத்மவுக்குச் சீடர்களென்று சொல்லிக் கொள்வோர் உண்மைச் சீடர்களா யிருந்தா லன்றோ சுயராஜ்ய நிதியின் நிர்வாகமும் உண்மையான மாதிரியில் நடந்து நன்மை பயந்திருக்கும். கொஞ்சம் நன்மைகளாலது உண்டாயிருக்குமாயில் அது மஹாத்மாவின் அந்தரங்க சுத்தியின் பலனுகவே உண்டாயிருக்குமன்றி சுயராஜ்ய நிதியை பழுபடுத்தி விட்ட சுயகாரியப்புலிகளால் உண்டாகிருக்கமாட்டாது.

இனிமேலாவது ஷை நிதியின் நிர்வாகத்தை ஒழுங்கு படுத்த உண்மைத் தேசாபிமானிகள் முற்படுவார்களா? A. C. பாண்டியன்,

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

மனனமாலை.

(ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்)

பகவானே ஒருவனே தேவர்களுக்குத் தலைவனாய் ஆக்க முடியும். ஒருவனே அதிபாதாளத்தில் ஆழ்த்தவுங் கூடும்.

பகவானே! நீயே நடத்துபவன். நானோ உன்னை ஆடுகிறேன். நீ என்னை நடத்துகிறபடியால் அதுபோல் நான் நடக்கிறேன். நீ என்னைப் பேசும்படி செய்கிறபடியால் நான் பேசுகிறேன். ஓ பிரபுவே! ஒவ்வொன்றும் உன் இஷ்டத்தால் நடக்கிறது. என்னிஷ்டத்தால் அல்லவேயல்ல இதுவே உண்மையான ஞானம். இதை அறிந்த பிறகு தான் பந்தத்திலிருந்து விடுபடுகிறான்; தற்பு கழ்ச்சி அழிந்துவிடும். அது மனிதனுக்கு உள்ள சத்துருக்களில் மஹா கொடிது அதை ஹதம் செய்துவிடு; பிறகு நான் ஞானதிவாகரன் உன்னில் விளங்குவான் நீ யார் என்று நினைத்துப்பார். எதற்காக பிறருடன் சண்டை, வாது முதலியது செய்யவேண்டும். நான் தேவகுமாரன். புகழ், துக்கம், வருத்தம், சந்தோஷம், ஹிம்சை இவைகள் அற்றவன்.

மூடர் அல்லவோ பிறர் தம்மை நன்கு மதிக்க வேண்டுமென்றும், புகழவேண்டுமென்றும் நினைப்பார். பிறர் புகழாவிட்டால் சந்தோஷமற்றவராயும், துக்கமுள்ளவராயு மிருப்பார். அது புத்தியற்ற தன்மை. அப்பேர்ப்பட்ட அறிவின்மையான காரியத்துக்கு இடம் கொடாதே. இவ்வுலகம் ஐந்து நிமிஷம் மூடர்கள்மீது ஆட்டம். உலகத்தில் உண்மையுள்ளது எது அதை தர்க்கித்து ஆராய வேண்டும். அடிமைத்தனமாயிருப்பதில் பிரயோஜனமில்லை. நமது புலன்களும் ஆசைகளும் போகிற வழியில் ஏன் நாம் போகவேண்டும்? நாம் சண்டையிட்டு அவைகளை ஜெயிக்க வேண்டும். நமக்கு ஏராளமான வேலை யிருக்கிறது. அப்படியிருந்தும் செய்தே முடிக்கவேண்டும். சுயேச்சையை அடையும் முன் அந்த வேலையை முடிக்க வேண்டும். நாம் அதை பயத்தில் விட்டுவிட்டால் அது சிருஷ்டியாய் வளர்ந்து அதிக கஷ்டத்தை விளைவிக்கும். பகவானுடைய அருளினால் அதை ஜயித்து வழியெல்லாரும் அறியும்படி எற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. படிமற்றவனும் சந்தோஷமுள்ளவனுமிருக்கிறபடியால் அந்த வழியில் நிதானமாய் நட. ஒரு முட்டையை சுமப்பது ஒரு கடினமான வேலை. அதை இறக்கி வைப்பது அதிலும் கஷ்டமான வேலை.

ஒருவன் தன் நடனை எப்படித் தீர்க்க முடியும்? அவன் உபதேசத்துக்கு சரியாய் உண்மையும் பரிசுத்தமான மனதுடன் ஒழுகுதல் வேண்டும். வேறு மார்க்கமில்லை பொருள் உதவியும் உத்தியோகமும் பிரயோஜனமுமில்லை சோம்பேறித்தனத்தை விட்டுவிடு. முன்னேக்கிச் செல். நீ சாரீரமல்ல. மாம்சமல்ல. ஆனால் சக்தி. அது பரிசுத்தமும், சுவை பக்தியும் நிறைந்த களங்கமற்ற ஆத்மா. இந்த பெரிய எண்ணத்தை மனதில் வைத்துக்கொள். உன் சாரத்தை ஒன்றும் செய்ய தைரியம் கொள்ளாது. பகவான்எப்போதும் உன்னைக் காப்பாற்றுவான். அவருடைய அருளில்லாவிட்டால் ஒரு சத்தையாவதையும் செய்ய முடியாது. ஆகையால் நாம் சரியான வழியிலிருக்க வேண்டும். மனிதன் ஆயுள் காள் முழுதும் ஆத்மாவையே யிருக்கிறது அப்படியிருக்க லோக ரக்ஷகனை மறந்து விடுகிறான். மனிதன் உலக வாழ்க்கையில் உழன்று உலக வஸ்துக்களே நித்யமானது என்று மதிக்கிறான். லோக ரக்ஷகன் அருளால் ஞானத்தை அடைகிறான். உலக இன்பத்தின் பற்றை விடுகிறான். நமது ஜீவிய காலம் வரையில் துக்கநிறைந்திருந்தாலும் சந்தோஷமுள்ளிருந்தாலும் ஒன்றையும் லக்ஷியம் செய்யாமல் இரக்ஷகனுடைய புகழைப் புகழ்வோம். அவன் நோக்கத்தில் நாம் வசப்படுவோம். அவனின் அருளில் பைத்தியம் பிடித்தவர்களாவோம். ஆத்த நிமிஷமே உலகப்பற்றை தானே விலகிப் போய்விடும்.

மனிதர்களின் புகழ்ச்சியிலும் இகழ்ச்சியிலும் அன்பிலும் வெறுப்பிலும் பொறாமையிலும் அற்ப எண்ணங்களிலும் என்ன இருக்கிறது? அவைகளை எவ்வாறு மதிக்கிறவர்வோம். நல்ல மனப் பூர்வமான அன்போடும் பக்தியோடும் அவனையே (ரக்ஷகனையே) ஆராதிப்போம். நம் ரக்ஷகன் சந்தத்தாலும் ஜீவிதாந்தாலும் குழச் செய்வான். நாம் அவனுடைய அன்புள்ள குழந்தைகள். ஒரு போதும் நம்மை பாதுகாக்காமல் விட்டுவிடான். உலக இன்ப துன்பங்களே தெய்விகமான பக்தியின் வளர்ச்சிக்கு மிகவும் உபயோகமானவை. உறுதியாய் நில். எது வந்தாலும் வரட்டும். எது போனாலும் போகட்டும். பாறையைப் போல் இரு. உன்னிலும் உன் இஷ்ட தேவதையினிடத்திலும் நம்பிக்கை வைத்திரு. ஒருவன் நம்பிக்கையாலும் தான் சுத்தியற்றவன் என்று பரமாத்மாவில் அடைக்கலம் புகுவதினாலும் தான் உண்மைப் பொருளை அறிவான்.

விடுமுறை வின்னப்பம்

இப் பூவுலகின் கண்ணுள்ள சகல தேசநாட்டார்களும் அவர்கள் தேசநன்மைகளாகவும் குல முன்னேற்றத்திற்காகவும் மிகவுந் துரிதமுடன் உழைத்து வருகிறார்கள். நாம் நம் தேச நன்மையைப்பற்றி ஆராய்வதற்குள் நம்குல முன்னேற்றத்தைப்பற்றி சிந்திப்பதே சாலச் சிறந்தது. அவ்வாறு நாம் நமது குல முன்னேற்றத்திற்காக உழைப்பது அனைத்தும், தேச முன்னேற்றத்தில் தான் கொண்டு விடும்.

நாம் வசிக்கும் இப் பரதகாண்டமானது நாற்றுக்கணக்கான ஜாதிகளால் நிரப்பப்பட்டுள்ளது. அவற்றுள் 10-லட்சம் ஜனத்தொகை கொண்ட நம் நாடார் சமூகம் ஒன்று. கடந்த சிலாண்டுகளுக்குள் கல்வி, வைத்தொழில். வியாபாரம், ஆகிய இவற்றில் பிற ஜாதியார்கள் நம்மைக் கண்டு ஆச்சரியப்படக்கூடியதாய் ஒருவாறு முன்னேறி இருக்கிறோமென்பதில் ஐயமில்லை. நம்குல முன்னேற்றத்திற்காகவும் கல்வி கைத்தொழில் வியாபார அபிவிர்த்திக்காகவும் நம் தாய்ச்சங்கமும், தலைவர்களும், நம் குலப் பத்திரிகைகளும் பிராரகர்களும் செய்துவரும் முயற்சியானது எழுதப்புகின் விரியும், என்றாலும் நாம் இன்னும் பூரண முன்னேற்றமடைய வில்லையே! குலப் பத்திரிகைகள் போதுமான சந்தாதார்கள் சேரவில்லை யென்று கூச்சலிடுகின்றன. தாய்ச்சங்கமானது நம் சமூகம் 10-லட்சம் ஜனத்தொகை கொண்டதாயினும் ஒரு லட்சம் அங்கத்தினர்கூட சேரவில்லை யென்று ஓலமிடுகிறது. நிலக்கட்டு வரியானது பெரிய பெரிய ஊர்களில் தான் இன்னும் வசூலிக்கப்படவில்லை என்று தாக்கப்படுகிறது. மதுரையில் சிதம்பரம் மகமை சீர்திருத்தம் அடைய வேண்டியிருப்பது போல் பல விடங்களிலும் பல காரியங்கள் சீர்திருத்தம் அடையவேண்டியிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் இன்னும் நமக்குள்ளிருப்பதற்கு பல காரணங்கள் பகராலாமெனினும். நம்மவர்களில் வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களாகிய பெரும்பான்மையோர்களுக்கு மாதமொரு நாளாவது விடுமுறைநாள் என்று ஏற்படுத்தப்படாமலிருப்பதே முக்கிய காரணமாகுமென்பதை பின் வருமாறு விளக்குவோம்.

விடுமுறை நாளானது சகல விதத்திலும் நன்மை பயக்கக்கூடியது என்பது இதனை வாசிக்கும் நம்குல சகோதரர்கள் அனைவருக்கும் நாம் சொல்லாமலே விளங்கும். நம்மில்பெரும்பான்மையோர் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிறோம். உத்யோகவர்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் வியாபாரம் அன்றி வேறு தொழில் செய்பவருக்கும் போதுமான சாவகாசம் உண்டு. ஆனால் வியாபாரிகளுக்கும் அவர்களுடைய வேலையாட்களுக்கும், காலை 8-மணிக்கு வேலை ஆரம்பித்து இரவு மணி ஒன்றுக்கு வேலையை முடித்து அப்பால் அரைகுறையாக சாப்பிட்டு தூக்கமும் குன்றி திரேகம் சீக்கிரம் நசிந்து போகிறது. இப்படி இருந்தால் எவ்வாறு பத்திரிகைகளுக்கு சந்தாதார்கள் ஏராளமாக சேர்வார்கள்மற்றவர்களையும் தங்கள் நண்பர்களையும் சந்தாதார்களாய் சேர்ந்து கொள்ள தூண்டுவதற்கு எங்கே சவகாசமிருக்கிறது. தாய்ச்சங்கீதிதுக்கு அங்கத்தினர் எவ்வாறு லக்ஷக்கணக்காய் சேர்வார்கள்? எவ்வாறு நிலக்கட்டுவரி சீக்கிரத்தில் வசூலிக்கப்படும்? எவ்வாறுசங்கங்கட்டுப்பாடுகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவது? மாதம் ஒரு நாள் விடுமுறை நாள் என்று ஏற்படுத்தப்பட்டாலல்லவா சங்கநோக்கங்களையும் பத்திரிகா அபிவிர்த்தியையும் நிலக்கட்டு வரியையும் மற்றும் குல முன்னேற்றத்திற்கான காரியங்களையும் சகலரும் ஒன்று கூடி ஆராயலாம். இவ்விஷயத்தில் நம்மவர்களின் தலைநகரென்று போலிவுற்று விளங்கும் சிவகாசி மாநகரைநாம்கவனிக்கத்தகுந்தது. அவ்வூரில் ஒவ்வொரு மாதமும் திருக்கார்த்திகைத்தினத்தை நாடார் நன்மக்களாய் பிறந்த ஒவ்வொருவரும் விடுமுறைநாளாகக் கொண்டாட வேண்டும். என்றுகாலஞ்சென்ற ஸ்ரீமான் பா. செ. பாலப்ப நாடார் அவர்கள் ஆக்ஞாபித்தபடி ஒவ்வொரு மாதமும் கார்த்திகை தினம் விடுமுறை நாளாகக் கொண்டாடப்படுகிறது. அன்று தினம் அங்கர் கலைரசமோ, என விளங்குகிறது. பெண்கள் காலைகாலத்தில் குளித்து ஆடை ஆபரணங்கள் விசேஷமாய் அணிந்து அணிஅணியாய் கோவிலுக்கு சென்று சுவாமி தரிசனம் செய்து நிரம்பியிருக்கிறார்கள். வியாபாரிகள் அனைவரும் அன்று சவகாசமாக தங்கள் தங்கள் வீட்டில் மனைவி மக்களுடன் குடும்ப விருத்தாந்தங்களைப் பற்றி பேசி, அந்தகளைச் சந்தோஷமாய்க் களிக்கிறார்கள். கடைக்குமஸ்தாக்களும் வாலிபர்களும் ஆங்காங்கு கூடி குலமுன்னேற்றத்திற்கான விஷயங்களை ஆராய்கிறார்கள். பக்கிமான்கள் அங்காங்கு கூடி சமய ஆராய்ச்சியெடுத்தோதுகிறார்கள். குலப் பத்திரிகைக ளெல்லாம் அன்று தாராளமாய் வாசிக்கப்படுகின்றன. சகல விதத்திலும் அந்திருக்கார்த்திகை தினமானது நன்மையான விஷயங்களில் போக்கப்படுவதற்கு காரணமாயிருந்த காலஞ்சென்ற முதலாளி ஸ்ரீமான் பா செ. பாலப்ப நாடார் அவர்களின் பெருமை தான் என்னே! பாண்டிய மரபன்.

(தொடரும்)

உலகத்து மன்மதன்

8மகோவிகளும் 78கண்ணாடிகளும்

நியூயார்க்குக் கடுத்த போலிஷ்லி என்னும் நகர்ப்புறத்தில் ஜான் லிச்லோ என்ற வாலிபன் ஒருவனைப்போலீஸார் பிடித்திருக்கிறார்கள். அவனுக்கு வயது 25. நடுத்தரமான உயரமுள்ளவன். ஒல்லி, சுருட்டைவாய்ந்த கருமயிரன். தான் சரித்திரத்திற் போரோன மன்மதனென்று அவனை ஒப்புக் கொள்ளுகிறான். ஒரு வாரத்தில் 8 மனைவிகளைக் கலியாணம் செய்துகொண்டானாம். ஜனவரி மாதத்தில் 78 காதல் விஷயங்களை டெக்ஸாவிலிருந்து பினாரிடமா வரையிலுள்ள விடுதிகளில் நடத்தினானாம். செல்லாத செக்குகள் எழுதிக் கொடுத்துவிட்டுப் போய் விட்டானென்று கதறுகிறவர்கள் சிலர். தம்மை ஏமாற்றிக் கெடுத்துவிட்டானென்று கூவுகிற ஸ்திரீகள் சிலர். கல்யாணச்சடங்கு செய்துவைத்ததற்குப் பணங்கொடுக்க வில்லையென்று குறைகூறும்பாதிரியார்கள் சிலர். இவர்களுக்கு மத்தியில் மேஜர் என்று தன்னைச் சொல்லிக்கொண்டு திரிந்த இவனைப் போலீஸார் பிடித்தார்கள். அவன் உண்மையில் ஒரு ரிப்பாய்தான். பிரான்ஸு முன்னணியில் யுத்தம் செய்ததாக சொல்லிக்கொள்வது நிசமோ. அல்லது பிரான்ஸுக்கு அனுப்புவதாக எண்ணியிருந்த சேனையிற் சேர்ந்தவன்தானோ வென்பதும் இனித்தான் தெரியவேண்டும். அவனைப் பார்த்தால் லோகசஞ்சாரி மாதிரி காணப்படுகிறான். பத்திரிகை நிருபர்கள் அவனது காமலீலைகளைப்பற்றிக் கேட்டபோது 'என்வேலை யெல்லாம் படபட வென்று பட்டாசு சுடுவது போல் சுடுவதுதான், என்கிறான். யாரையாவது கொன்றிருக்கிறாயா வென்றால் இல்லை யென்று கோபத்தோடு மறுக்கிறான். ஆனால் பிரான்ஸில் காயப்பட்டபோது மாத்திரம் மருந்துமயக்கத்துக் குள்ளானதாகச் சொல்லுகிறான். என்பேரில் ஒரு குற்றமுமில்லை சித்தினிகளும் அத்தினிகளுமாக மேல் வந்து விழுகிறபோதுதான் என்னை சொல்வேன்' என்று கூறுகிறான். மாஸாசுலட்டிலுள்ள லொஸ்டனில் 5லிலோ மனைவியர் அப்பட்டனர். முழு விசாரணையும் நடத்தி எல்லாவையும் கண்டுபிடிக்கும் வரையில் அவனைக் கோர்ட்டில் நிறுத்த யோசிக்கிறார்கள்.

த. மி. க.

இலங்கை வர்த்தமானம்.

வெள்ளத்தினு லேற்பட்ட சேதம். தென்னிந்தியா ரெயிலில் மதுரைக்கு 20-மைலுக்குத் தெற்காக பெருமழை பெய்து வெள்ளம் பெருகி ரெயில்வே தண்ட வாளங்களை இழுத்துக் கொண்டு போய் விட்டதினால், இலங்கைக்கு இரண்டு மூன்று நாட்களாக இங்கிய தபால்கள் வரவேயில்லை. நமது "மித்திரனும்" கப்பலுக்காகக் காத்திருக்கிறான் போற்தெரிகிறது. தற்சமயம் பிரயாணிகள் இந்தியாவுக்கு ரெயில்மூலமாய்ப் போகவியலாது. கப்பல் மூலமாய்த்தான் தபால்கள் இரண்டு மூன்று நாட்கள் கழிந்து வந்துகொண்டிருக்கின்றன. எறக்குறைய இன்னுமோர் வாரத்திற்கு ரெயில்வே மூலமாய் பிரயாணிகளும், தபால்களும் வரப்போகக் கூடாதென்று யூகிக்கப்படுகின்றது.

இலங்கை சட்டசபை.

இலங்கை சட்டசபையில் கவர்ன்மெண்ட் அதிகாரிகளுக்கு சம்பளம் உயர்த்தும் மசோதா வொன்று கொண்டுவந்ததின் பொருட்டு, தெரிந்தெடுக்கப்பட்ட 14அங்கத்தினரில், 12பேர் தங்கள் பதவியை ராஜிநாமாக் கொடுத்ததை கேயர்கள் அறிவார்கள். கடந்த மாதத்தில் இப்பன்னிரண்டு பேர்களுக்காக மறுபடியும் நியமனம் நடந்ததில், இவர்களே நிரம்பவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். தெரிந்தெடுக்கப்பட்டவரை மறுதடவையாகச் சேர்ப்பதற்கு சட்டசபை கூட்டம் (2-12-22) சனிக்கிழமை 2—மணிக்கு நடந்தது. அதில் மிஸ்டர், நிலகரத்தினம் என்பவரைத் தவிர மற்றையவரும் ஆனையிட்டு தங்களிடத்தை மீட்டுக்கொள்ள அக்கூட்டத்திற்கு லீஜயஞ் செய்யாமலிருந்து விட்டனர். சட்டசபை கூடும் மண்டபத்தில் இவர்களுடைய ஸ்தானங்கள் காலியாயிருந்தமையால், பிரசன்னமாகியிருந்த உத்தியோகஸ்தர்களிடம் சந்தோஷ மென்பதே காணப்படவில்லை ஆடிடர் கவர்னர், மிஸ்டர் சிரிமிர்மென்றி, யாவரும் ஒத்து ழைப்பது இன்றியமையாதவிய மென்று வெகு அநுதாபத்துடன் கூறினர். ஒத்துழைக்குந்தோறுமிருக்கும் ஒத்துழையாமையையும், ஜனப்பிரதிநிதிகளின் ஐக்யத்தையும், இந்தியாவில் வாயினால் மாத்திரம் பேசக் ஒத்துழையாக் கட்சியார் கவனிப்பது நன்று !!

ஞா. பா. வேதநாயக நாடார்.

நமது மித்திரன்

போஷகப் பிரபுக்கள்.

பாலக்காடு முனிசிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.

அருப்புக்கோட்டை முதலாளி ஸ்ரீமான் மு. மு. முத்துக் குமாரசாமி நாடார்.

சென்னை. நீலநூல்.வியாபாரம், நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.

சென்னை "விநோத விகடன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டியநாடார்.

திருநெல்வேலி, முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் அரி. அ. சேண்பக நாடார்.

திருநெல்வேலி ஜில்லா மானுடு தண்டுப்பத்து, மிராஸ்தார் ஸ்ரீமான் சோ. செல்லத்துரை நாடார்

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

அறிவுடை நண்பர்கட்கோர் அன்பான ஓர் விண்ணப்பம்.

இறந்துபோன பலத்தை ஒரேவேளை லேகியம் சாப்பிட 1-மணி நேரத்தில் கொடுக்கும், துரையே கவனியுங்கள்.

மெடல் பெற்ற

ஊர்க்குருவி சத்தின் "லேகியம்"

இந்த லேகியபாகம் மற்றோர் செய்து கொடுத்தால் ரூபாய் 1000 இனாம். வெண்பா.

ஊர்க்குருவி சத்தெடுத்து உன்னதமாய்ச்செய்த இந்தச்
சீர்கொண்ட லேகியத்தைத் தின்றவர்கள் பேர்கொண்ட
சிங்கம்போல்வீரஞ் சிறந்தாண்மை தத்துவராய்
மங்கையுடன் வாழ்வார் மகிழ்ந்து.

☞ இந்த லேகியம் ஒவ்வொரு புருஷர்களும் பரிஷித்து சந்தோஷமடைவீர்களாக. தத்தம் துரச்செயலால் ஜீவரத்தினமாகிய இந்திரியத்திற்கு ஏற்பட்டிருக்கும் கெடுதிகளை நீக்குவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிது. இந்திரியகலப்பும் இந்திரிய நீர்பு நீ நிலைவிதம் நித்திரை ஸ்லேதம் ஆண்குறி சோர்வு எழுவகை தாதுக்களின் பலவீனம் அஸ்தி வெட்டை சூடு நாம்பு தளர்ச்சி சதை இழுப்புவலி மலச்சிக்கல் பசி மந்தம் பித்தாதிக்க உஷ்ணவாய்வு கிருமி ரோகம் மூத்திர வியாதிகள் தேகத்தில் ஒடித்திரியும் பலவித வாயு ரோகம் பாரிக வாய்வு கெஞ்சுவலி விரைவாதம் கைகால் அசதி மயக்கம் மதி முதலியன நிவர்த்தியாகும். சிங்கவீரிய ஆண்தத்துவத்தை புஷ்டியாக்கி இந்திரியத்தை மலிபோல்கட்டி போக இன்பத்தை கொடுக்கும் இந்த ஊர்க்குருவி சத்தின் லேகியம் குறைவில்லை என்று சத்தியமாய்ச் சொன்னால் ரூபாய் 500 இனாம் கொடுக்கப்படும்.

40 நாள் 16 பலம் டப்பி 1-க்கு ரூபாய் 10—0—0 20 நாள் 8-பலம் டப்பி 1-க்கு ரூ 5—0—0 12-நாள் 5 பலம் டப்பி 1,க்கு ரூபாய் 3—0—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

மருந்து உபயோகிக்கும் விபரங்கட்டலை மருந்துடன் அனுப்பப்படும்.

பினங்கு, சிங்கப்பூர், பினாங், குவாலாலம்பூர், போர முதலிய பிரதேச வாசகர்கள் மருந்தின் விலையும் தபால்சார்ஜ் ரூ 2-8 0 யும் சேர்த்து மூன்பணம் அனுப்பி மருந்து பெறவேண்டும். மேற்படி ஊரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதுவது கடிதங்களை அங்கீகரிக்கப் படமாட்டாது. தங்கள் விலாசம் தெளிவாய் எழுதவும். வியாபாரிகளுக்கு 100-க்கு ரூபா பத்து விதம் கமிஷன் கொடுக்கப்படும்.

☞ எமது விலாசம்:—

எம். ஏ. மரைக்காயன் அண்டு கம்பெனி,
ஆயுர்வேத வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

☞ எமது சிலோன் ஏஜண்டுகள்.

பேர் கேல்லியா கேட்டியார்,
கொபண்டரி வத்தை, நாவலப்பிட்டியா போஸ்ட், சிலோன்.

தத்துவ இஸ்லாம்

இஃதொரு சித்திரப் படமுள்ள நூதனமான முதல்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

இச்செந்தமிழ்ப் பத்திரிகையில் இஸ்லாந்தின் தத்துவங்களெல்லாம் உள்ளது உள்ளபடியே வெளிய நடையில் வெளியாக்கப்பட்டு வருகின்றன. இஸ்லாமாக்க சம்பந்தமான பெரியோர்களின் உண்மைச் சரிதைகளும் எக்கள் மதின் நாயகர் மஹாத்மியமும் மிக்கத் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் வெளி வரும். இஸ்லாமார்க்கத்தின் தத்துவத்தையும் அதன் பெருமையும் முஸ்லிம் ராஜ்யங்களின் முற்கால தற்கால நிலைமையையும் அறிய விரும்பும் ஒவ்வொருவருக்கும் இப்பத்திரிகை அத்தியாவசியமானது.

வருஷ சந்தா தபாற் கூலியுள்பட ரூ 3-0-0 அயல் நாடுகளுக்கு ரூ 4-0-0

மானேஜர், தத்துவ இஸ்லாம் ஆபீஸ்,
காச்சியார் கோவில்.

வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!!

அனுபோக

"கைத்தொழில் போதினி."

என்னும் அருமையான கைத்தொழில் சாஸ்திரம் வெளியாகி விட்டது. இதிலடங்கிய அனேக இரகசிய முறைகளைக் கொண்டு, ஏழைகளனைவரும் முன்பணம் அதிகச் செலவில்லாமலும், பிரயாசை இல்லாமலும், நிறையபணம் சம்பாதிக்கலாம் என்பதில்லையாய் சுகஜீவனம் செய்யவிரும்பும் ஒவ்வொருவருக்கும் தக்கசமயம் இதுவே என்பதை மறந்து விடாதீர்கள். காப்பி 1-க்கு விலை ரூபாய் 1. வி. பி. செலவு அணா 5. (முன்பணம் அனுப்புவோருக்கு தபால் சார்ஜ் இனாம்.

K. N. S. & Co.,
ARIMALAM.

தேசோபகாரி.

தேசிய விஷயங்களையும், காங்கிரஸ் லீகபத் கொள்கைகளையும், சுயராஜ்ய விசேஷத்தையும், இந்து முஸ்லீம் ஐக்கியத்தின் அவசியத்தையும் எடுத்துக்காட்டி, ஜனங்களின் குறைகளை நீக்கவும், பல துறைகளிலும் சீர்திருத்தும்படி செய்யவும் அதற்குவழிகளைக் காண்பிக்கவும், தேசசேவையே தனது நோக்கமென்று "தேசோபகாரி" யென நாமம்புனைந்து பர்மா தேசத்தின் தலை நகராகிய இரங்கூனில் அவதரித்து தற்காலம் வாரம் ஒரு முறை பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் வெளிவந்துலவுகிறது.

சந்தா விபரம்.

உள்நாடு, { உள்ளூர் வருஷ சந்தா ரூபா 5—0—0
வெளியூர் வருஷ சந்தா ரூபா 6—0—0
வெளிநாடு வருஷ சந்தா ரூபா 7—0—0

மானேஜர், C. மாணிக்கம்,
"தேசோபகாரி" லிமிடெட்,
நெ 6, 52-வது வீதி இயங்கோன்

நாடார் பாங்கு

லிமிட்டெட் தூத்துக்குடி,

மூலதனம் ரூ 20,00,000

வாக்குறுதி செய்யப்பட்ட (SUBSCRIBED) மூலதனம்
(17-10-22 முடிய) ரூபா 376960
செலுத்தப்பட்ட மூலதனம்
(17-10-22-முடிய) ரூபா 174385

தூத்துக்குடியில் நடந்த ஆறாவது நாடார் காண்பரென்சின் தீர்மானத்தின்படி பாங்கு ஆரம்பித்து வேலை நடந்து வருகிறது. மூலதனம் ஜாஸ்தியிருக்கச்செய்தால் அதற்குத்தகுந்த லாபமிருக்கும் பங்கு எடுத்தவர்களுக்கும் அதுகலமாயிருப்பதோடுகூட லாபத்தில் ஒருபாகம் நம் பொது நன்மைக்காக செலவிடப்படுமாதலால் நாடார்குலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு கூடுதலான பங்குகள் எடுத்து இந்நற்பெருங்காரியத்தை சித்திபெறச் செய்யவேண்டியது நம் கடமை. ஆகையால் காலதாமதம் பண்ணாமல் உடனே பாங்கின் பங்குகளுக்கு அப்பிளிக்கேஷன் அனுப்புங்கள் வரவேற்றும் பத்திரிகையும் அப்பிளிக்கேஷன் பாரமும் கேட்பவர்களுக்கு உடனே அனுப்பிவிக்கப்படும்.

நீங்கள் ஒரு சந்தாதாரரா? இல்லையா? அப்படியாயின் சேருவதற்கு முந்துங்கள்.

ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்.

பிரதிமாதமும் முதல் வாரத்திற்குள் தவறாமல் வெளிவரும் இப் பத்திரிகை பிறமத துஷணை யின்றி, ஸத்மத ஸிருஷ்டியையும், நேச சேவையையும் முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

ஸர்வ மதத்திற்கும் பத்துயிர் அளித்த தவராஜ சிரோமணியாகிய ஸ்ரீமத் விவேகி விவேகானந்த சுவாமியவர்களின் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாரால் நடத்தப்படுவது.

தமிழ், ஆங்கிலம் இவற்றில் வல்லுநர்களாலும் உலகாநுபவம் மிகப் பெற்றவர்களாலும் எழுதப்படும் விஷயங்களைக் கொண்டது.

உள்நாடு வருஷச் சந்தா ரூ 3-0-0 வெளிநாடு வருஷச் சந்தா ரூ 4-0-0

மானேஜர், ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்,
மயிலாப்பூர், சென்னை.

FOUNDER OF THE ROLL BISCUITS FIRST AT MADURA.

Best Indian Biscuits Factory.

பெஸ்டு இந்தியன் பிஸ்கட்ஸ் பாக்டரி.

மதுரையா நகரில், முதல் முதல் ரோல் பிஸ்கட்ஸ் கம்பேனி ஸ்தாபித்து இந்தியா, சிலோன், முழுவதும் நற்பெயர்பெற்று அனேக டாக்டர்களாலும், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களாலும், டாக்டர் வேடிக்கைகளாலும், மானிட ஜென்மங்களாகிய நமக்கு, சுகாதாரத்துக்கு ஏற்றவான தென்று பரிசோதிக்கப்பட்டு, தங்கம் வெள்ளி மெடல்களும், அனேக சர்ட்டிபிகேட்களும் பரிசாகிக்கப் பெற்ற ஆர். எம். எஸ். அன்வன்ஸ் கம்பெனியாரால் தயாரிக்கப்படுகின்ற பெஸ்ட் இந்தியன் பிஸ்கட்ஸ்களை வாங்கி உபயோகியுங்கள்.

எங்கள் கம்பெனியில் தயாரிக்கப்படுகின்ற சுகம் பிஸ்கட்ஸ் ஆங்கிலேய சுகாதார முறைகளை அனுசரித்து, இரேகத்திற்கு புஷ்டியையும் பலத்தையும் கொடுக்கக்கூடிய அனேக விதமான எலண்ஸ்களைச் சேர்த்து நிமை பிஸ்கட்ஸ்களுக்கு சமமாகத் தயாரிக்கப் படுவதினால். அதிக வியாபாரங்கள் எங்கள் கம்பெனிக்கு ஏராளமான ஆடர்கள் கொடுத்து சாக்கு தருவித்து விர்பனை செய்து வருகிறார்கள். ஆவியெங் வங்கன்டிடேட் மார்க்கு "டிஞ்ஜின்" போட்ட பிஸ்கட்ஸ்களை கவனித்து வாங்குங்கள். வேண்டுவோர் பிரண்ட விலாசத்திற்கு எழுதினால் விலை விபர ஜாபிதாவும் கேட்டார்க்கும் இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்,

ஆர். எம். எஸ். அன்வன்ஸ்
பெஸ்டு இந்தியன் பிஸ்கட் பாக்டரி,
புரோப்ரைட்டர், ராமச்சந்திரன். நற்பாளையத்தெரு மதுரை.

நாடார் பாங்கு லிமிட்டெட் தூத்துக்குடி,

தாண்டு பிக்னட் டிபாஸிட், சேவிங்ஸ் பாங்க் கணக்குகள் வைக்கப்படும். வட்டிவிபரம் மனு செய்து தெரிந்துகொள்ளவும். சரியான செக்யூரிட்டியின் பேரில் கடன்களும், சொக்க கிரெடிட்டும் கொடுக்கப்படும். எக்ஸ்சேஞ்சு தொழிலும் நடத்தப்படும்.

விற்பனைக் கிரயம் சொற்பமே!

என்ன விலை? நாலணாதான்.

என்ன பொருள்?

நாடார் மகாஜன சங்கச் சங்கீத மஞ்சரி.

யாருக்குத் தேவையானது? நம்மெல்லோருக்கும் இப்புஸ்தகம் அவசியந் தேவையானது. யார் எழுதியது? தமிழ் நாடகாசிரியர், சென்னை, ச. சு. சங்கரலிங்க நாடார்.

ஐயா! ஐந்தணா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் ஒரு புஸ்தகம் அனுப்புவார்களா? தடையில்லாமல் அனுப்புவார்கள் ஐந்து புஸ்தகங்கள் தேவையானால் வி. பி. மூலம் அனுப்புவார்கள்.

இன்றே எழுதுகிறேன்.

விலாசம்:—

தி. மா. ஐயாவு நாடார் & கம்பெனி
பட்டன் பாக்டரி & ஜெனரல் மெர்ச்சன்ட்
வண்ணாரப்பேட்டை
சென்னை.

Printed and Published by [illegible] at the Tamil Nadu Press, Ammukottai.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection